TAJ SAMUDRAH
Indian, Srilankan Restaurant
260-A, EALING ROAD, WEMBLEY, MIDDX. HA0 4QD
Specialists in Catering for Weddings & Parties
* Over 100 Seat capacity
* For Parties over 100, we provide complimentary equipment & services free of charge
Call: 020 8795 1616
7 Days 9 a.m. to Midnight

FREE இலவசம்
The UDHAYAN
உதயன்
Estd.: 1996
UK's No.1 National Tamil Newspaper

Asian Funeral Care Ltd.
Funeral Services
Welcome: International Transportation and DSS Claims
Tel: 020 8909 3030 (24 Hours)
(Sanjay L. Lodhia)
35 Kenton Park Parade, Kenton Road, Kenton Harrow, Middx. HA3 8DN (Next to Barclays Bank)

e-mail: thelondon@udhayan.freeserve.co.uk UN-30 April 2003 For News & Advertising: 020 8952 5677 16 பக்கங்கள்

# தமிழ் சட்ட நிறுவனம் திடீர் மறைவு?

கிழக்கு இலண்டன் வோல்தம்ஸ்ரோவில் நீண்டகாலம் இயங்கி வந்த சட்ட நிறுவனம் ஒன்று அண்மைக் காலமாக காணாமல் போயுள்ளது. இந்நிறுவனத்தின் பொறுப்பாளர் சில மோசடிகளில் ஈடுபட்டதால் இவர் சட்டத்தரணியாக கடமையாற்றுவதில் இருந்து தடை செய்யப்பட்டு இருந்தார். இந்தத் தடை விதிப்புக்கு உதவியாளராக இருந்த நபரே காரணம் என தடைவிதிக்கப்பட்டவர் தெரிவித்து வந்தார். இதன் பின்னர் உதவியாளராக இருந்தவர் தனியாகச் சென்று ஒரு சட்ட நிறுவனத்தை ஆரம்பித்தார். அவரிடம் தனது வழக்கை ஒப்படைத்து இருந்த மார்க் வெஸ்லி ரஞ்சித் திருப்பி அனுப்பப்பட இருந்த போது அந்தப் புதிய சட்ட அலுவலர் ரஞ்சித்தை கைவிட்டதுடன் ரஞ்சித்தின் சட்டக் கோவையை ரஞ்சித்தை பிரதிநிதித்துவப்படுத்த முன் வந்த சட்ட நிறுவனத்திடம் கையளிக்க மறுத்து விட்டார். இறுதியில் ரஞ்சித் திருப்பி அனுப்பப்பட்டார்.

சட்டத்தரணியாக இயங்குவதில் இருந்து தடைசெய்யப்பட்ட நபர் வோல்தம்ஸ்ரோவிலேயே வேறு கட்டிடத்தில் வெளிக்கள அலுவலராக இயங்கினார். கடவுச் சீட்டு விண்ணப்பங்கள் மற்றும் உள்துறை அமைச்சின் விண்ணப்பங்கள் நிரப்புவது, உறுதிகள், சட்ட ஆலோசனைகள் என மட்டுப்படுத்தப்பட்ட அலுவல்களை மேற்கொண்டு வந்தார்.

இக்காலப் பகுதியில் மேற்படி நபர் பலரிடமும் பண மோசடிகளை மேற்கொண்டதாக செய்திகள் கிடைத்துள்ளது. அந்நிறுவணத்தினரால் பாதிக்கப்பட்ட மூவர் உதயனுடன் தொடர்பு கொண்டனர். அது பற்றி சில விசாரணைகளை நாம் மேற்கொண்ட போதும் சம்பந்தப்பட்ட நபருடன் எமக்குத் தொடர்பு கொள்ள முடியவில்லை. மேலும் கிழக்கு இலண்டனில் உள்ள சில சட்டத்தரணிகள் இக்குற்றச்சாட்டுகளை உறுதிப்படுத்தினர். ஆனால் யாரும் தம் பெயரைக் குறிப்பிட விரும்பவில்லை. பெப்ரவரி 28ல் திருப்பி அனுப்பப்படுவதை எதிர்த்து மேற்கொள்ளப்பட்ட கூட்டத்தில் பாதிக்கப்பட்ட சில தஞ்ச விண்ணப்பதாரிகள் உதயன் நிருபருக்கு மேற்குறிப்பிட்ட நபர் பற்றி சில முறைப்பாடுகளை முன் வைத்தனர்.

Luxury coach Tour of Germany
24th-26th may and 26th 28th August
(bank holiday weekends)
Beethoven- Rhine-Drachenfels - Ahr vally (3 days)
Include 2/3* accommodation B/B all transfers, Guided tours, entrance fees, Boat trip, Luxury coach and Ferry crossing.
Only £ 149.00 p.p
Visas arranged
Call 0800 093 1411
Email: info@ttal.co.uk
ATOL & IATA fully bonded

The International
Wood Floor Centre
Laminate Flooring available in 6 colours
£5.95 per sq.m + VAT only or Fully Fitted £24.95 + VAT
Engineered Floors £14.99 + VAT only
Solid Oak Floor £23.50 + VAT only
Free Estimates, Site Surveyor & Free Delivery
Open 7 Days Tel: 020 8951 4395 - 4495 Fax: 020 951 4251
21 North Parade, Mollison Way, Edgware HA8 5QH
www.internationalwoodfloor.co.uk

ALEAF WINDOWS LTD.
Up to 40% OFF
50% OFF Georgian Leaded Windows

FREEPHONE 0800 028 4747

BIRDY & CO
Solicitors
Legal Aid + Private
Immigration
Criminal
Landlord & Tenant
Matrimonial
Personal Injury
Civil Litigation
Conveyancing
Tel: 020 8900 9112
Emergency: 07802 436120
606B High Road
Wembley, Middx. HA0 2AF

Starline©
தமிழில் பேசி உங்கள் தேவைகளை பூர்த்தி செய்ய
Great Deals on:
* Connections
* Upgrades
* Pay As You Go
* Phone Accessory
* Car kit fittings
* Repairs
T - Mobile
Free Phone: 0500 120 121
Open: 10am - 7pm Mon - Sat & 12 - 6pm Sun
235 The Broadway Southall UB1 1ND

A40 Wholesale Ltd.
Specialists in Wines, Beer, Spirits and Softdrinks
* FREE Delivery
* Special Instore Prices
* Credit Cards Accepted
* Open 7 Days
Unit 4
427 Long Drive
Greenford
Middx. UB6 8UH
(Behind B&Q)
Tel: 020 8578 5500
Fax: 020 8578 8889

50ற்கும் மேற்பட்ட சினிமா நட்சத்திரங்களை காணத் தவறாதீர்கள்


Tamil MEGA STAR NIGHT 2003
See Page 7 for details
Sponsored by PALM BEACH & N BAY

Tyres • Exhaust • S. Absorbers • Brakes • Services
THE ALIGNMENT CENTRE
Specialist in
Advanced Four Wheel Alignment
FREE Wheel Alignment Check
10% OFF
Unit 7
Sheraton Business Centre
Wadsworth Close
Off Wadsworth Road
Perivale UB6 7JD
Tel: 020 8998 7486
Fax: 020 8998 8615

The UDHAYAN
உதயன்
ADVERTISE FOR BEST RESULTS
020 8952 5677

C & S
DISCOUNT STORE
BABY AND CHILDRENS' WEAR SPECIALISTS
HALF PRICE SALE AT

C&S சவுத்தோல், கிங்ஸ்பரி
Fixed prices Best Prices
714-716 Kenton Road, Kingsbury, Harrow HA3 9QX
109-111 The Broadway Southall Middx UB1 1LN
Open Mon-Sun 10.00am 6.00pm
(Kingsbury closed on Sundays)
At very reasonable price Hall for Hire Good facility near Alperton
TEL: 020 8903 6563

Master Copy



# தடைகள் நீக்கப்பட்டு, உறவு பலப்படுத்தப்படும் - பொலிஸ் அதிகாரி டேவ் டன்

தமிழ் சமூகத்திற்கும் பொலிஸிற்கும் இடையே உள்ள தடைகள் நீக்கப்பட்டு உறவு பலப்படுத்தப்படும் என அதிகாரி டேவ் டன் உதயனுக்குத் தெரிவித்தார். ஏப்ரல் 7ம் திகதி பொறஸ்ற் கேற் பொலிஸ் நிலையத்தில் இடம்பெற்ற இச்சந்திப்பிலேயே கியூச் இதனைத் தெரிவித்தார். இச்சந்திப்பில் டேவ் டன் உடன் சார்ஜன்ற் ஜெவ் கியூச், ராஜன் ஆகிய பொலிஸ் அலுவலர்களும் கலந்து கொண்டனர். பொலிஸ் பிரிவில் மக்கள் நம்பிக்கை இழந்து வருவதை உதயன் நிருபர் சுட்டிக்காட்டிய போதே டேவ் டன் மேற்படி தெரிவித்தார். சார்ஜன்ற் ஜெவ் கியூச் குறிப்பிடுகையில் சில அவநம்பிக்கைகள் இருப்பதாகவும் எதிர்காலத்தில் அவை நீக்கப்படும் எனவும் உறுதி அளித்தார்.

மார்ச் 19ல் கொல்லப்பட்ட ஈஸ்ற்ஹாம் கோஸ்டியைச் சேர்ந்த திலீபன் தங்கவடிவேல் மீது கிரிமினல் குற்றங்கள் ஏதாவது பதிவு செய்யப்பட்டு உள்ளதா என்று எமது நிருபர் கேட்ட கேள்விக்குப் பதிலளித்த கியூச் 'எங்களைப் பொறுத்தவரை ஒருவருக்கு குற்றமிழைக்கப்பட்டு உள்ளது. அவர் உயிரிழந்து உள்ளார். அவருக்கு இத்தண்டனை தேவையா? இல்லையா? என்பது பற்றி நாங்கள் பார்ப்பதில்லை' எனத் தெரிவித்தார். குற்றவாளிகளைப் பிடிப்பதற்கான விசாரணைகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது எனவும் அங்கு தெரிவிக்கப்பட்டது.

நியூஹாமில் இளைஞர் கோஸ்டி மக்களின் நாளாந்த வாழ்க்கையை குழப்பி வருவதுடன் ஹை ஸ்ரீற் நோர்த்தில் உள்ள வர்த்தக நிறுவனங்களுக்கு இக்கோஷ்டியினர் பயமுறுத்தல்கள் விடுவது பற்றியும் அவ்வதிகாரிகள் அறிந்து இருந்தனர். பொலிஸாரிடம் முறையிட்டால் இக்கோஷ்டியின் கோரத்தனமான நடவடிக்கைக்கு ஆளாக நேரிடும் என்பதால் மக்கள் பொலிஸாருக்கு தகவல் சொல்ல முன்வருவதில்லை என்பதை ஏற்றுக் கொண்ட அந்த அதிகாரிகள் தமிழ் மக்கள் பொலிஸாருக்குத் தகவல் தராமல் பொலிஸாருடன் ஒத்துழைக்காமல் இருந்தால் இப்பிரச்சினையைத் தீர்க்க முடியாது எனத் தெரிவித்தனர்.

இழைக்கப்படும் குற்றங்கள் பற்றியும் குற்றவாளிகள் பற்றியும் மக்கள் பொலிஸாருக்கு இரகசியமாகத் தகவல் வழங்கக் கூடிய வகையில் Tamil Hot Line ஒன்றை நியூஹாமில் ஏற்படுத்த முடியாதா என்று எமது நிருபர் கேட்ட கேள்விக்கு பதிலளித்த சார்ஜன்ற் ஜெவ் கியூச் இக்கருத்தை வரவேற்றதுடன் தனது மேலதிகாரிகளிடம் ஆலோசித்து அதனை ஏற்பாடு செய்ய முடியுமா என்பதைத் தெரியப்படுத்துவதாகக் குறிப்பிட்டார். அவர் மேலும் குறிப்பிடுகையில் வன்முறைக்கு எதிரான ஒரு விளம்பரப் போராட்டம் ஒன்றை செய்ய முடியும் எனவும் தெரிவித்தார்.

இறுதியாக பொலிஸார் தமிழ் சமூகத்தில் உள்ள வன்முறைக் கோஸ்டிகளை கண்டு கொள்ளவில்லை என்ற குற்றச்சாட்டை நீக்க விரைவில் செயற்படும் என அப்பொலிஸ் அதிகாரிகள் உதயனுக்குத் தெரிவித்தனர்.

கென்டனில் உள்ள த ஜலன்டேர்ஸ் ரெஸ்ரோறன்றில் ஒழுங்கு செய்யப்பட்டது. இந்நிகழ்ச்சியை திருமதி ஆனந்தி ரமேஸ், ரர்றின் கொன்ஸ்ரன்ரைனும் நண்பர்களும் ஏற்பாடு செய்திருந்தனர். திரு திருமதி கணேஸ்வரன் தம்பதிகள் பிரதம விருந்தினர்களாகக் கலந்து நிகழ்ச்சியைச் சிறப்பித்தனர்.

1981ல் அடிக்கல் நாட்டப்பட்டு ஆரம்பிக்கப்பட்ட இவ்வில்லத்திற்கான வேலைகள் 1986ல் பூர்த்தி ஆக்கப்பட்டது. ஆரம்பத்தில் மூளைவளர்ச்சி குன்றிய 10 பிள்ளைகளுடன் தொடங்கி தற்போது 10 ஆண்களும் 30 பெண்களுமாக 40 மூளைவளர்ச்சி குன்றிய 5 வயது முதல் 25 வயது வரையானவர்கள் இவ்வில்லத்தில் அடைக்கலம் பெற்று உள்ளனர். பாதிக்கப்பட்ட இவர்களை தங்கள் அன்றாட தேவைகளை கவனித்துக் கொள்ளக் கூடியவர்களாக பயிற்றுவிப்பது இவ்வில்லத்தின் முதற்கடமையாக இருப்பதாக இவ்வில்லத்தின் நிர்வாகத்தை கவனிக்கும் அருட் சகோதரி ஸ்ரீபனி தெரிவிக்கிறார். மேலும் மூளைவளர்ச்சி குன்றிய இக்குழந்தைகளுக்கு கைவினைப் பொருட்கள் செய்யவும் தையல் செய்யவும்; நுண்கலை, எழுத, வாசிக்கவும் பயிற்சிகள் அளிக்கப்படுகிறது. இதன் மூலம் இவர்களையும் சமூதாயத்தின் பயன்மிக்க பிரஜைகள் ஆக்க முடியும் என்ற நம்பிக்கையுடன் செயற்பட்டு வருவதாக அருட் சகோதரி தெரிவித்தார்.

உணவு, உடை, உறைவிடம் மற்றும் மருத்துவ உதவிகளையும் இவ்வில்லம் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்குகிறது. மேலும் இந்த 40 பேருக்கும் பயிற்சி அளிக்க 4 ஆசிரியைகளும் 3

(தொடர்ச்சி 3ம் பக்கம்)

# கடை போடுவது மட்டும் போதாது

## சினிமாவில் முதலிட வேண்டும் - ராஜேஸ் பாலா(இயக்குநர்)

முதலீட்டாளர்கள் கடைபோடுவதிலும் கோயில் கட்டுவதிலும் மட்டும் நின்றுவிடாமல் புலம்பெயர் சினிமாவிலும் முதலீடுகளைச் செய்ய முன்வர வேண்டும் என புலம்பெயர்ந்த மண்ணின் முதற் பெண் இயக்குநர் ராஜேஸ் பாலா தெரிவித்தார். ஈழவர் திரைக்கலை மன்றம், பிறின்ஸ் ஒவ் சிலோன் உணவகத்தில் மார்ச் 22ல் ஏற்பாடு செய்த கலைஞர்கள் ஆர்வலர்கள் சந்திப்பிலேயே ராஜேஸ் பாலா இக்கருத்தை வெளியிட்டார். இச்சந்திப்பில் சுவிஸில் இருந்து குறும்பட இயக்குநர் அஜீவன் சிறப்பு விருந்தினராக அழைக்கப்பட்டு இருந்தார். ஐ பி சி தமிழ் நிகழ்ச்சி முன்னிலையாளர் விமல் சொக்கநாதன் இச்சந்திப்புக்குத் தலைமையேற்றார்.



(அஜீவன்)

தொடர்ந்தும் தன் கருத்தை வெளியிட்ட ராஜேஸ் பாலா 'தமிழ் மக்கள் டொக்டராகவும் என்ஜினியராகவும் எக்கவுண்டன் ஆகவும் வர வேண்டும் என்று தான் படிக்கிறார்கள். பிலிம் மேக்கிங் பற்றிப் படிக்கிறதில்லை' எனக் குற்றம்சாட்டினார். தனது வெளிப்படையான சூடான பேச்சுக்களால் மிகவும் அறியப்பட்ட ராஜேஸ் பாலா தமிழ் சமூகத்தின் முட்டாள் தனங்கள் பற்றித் தெரிவித்து சிரிக்கவும் சிந்திக்கவும் வைத்தார்.

சிறப்புரை நிகழ்த்திய அஜீவன் 'எங்களிடம் படைப்புகளும் இல்லை, படைப்பாளிகளும் இல்லை' என்று முறையிட்டார். மேலும் புலம்பெயர்ந்த கலைஞர்கள் படம் எடுப்பது பற்றி கற்காமலேயே படம் எடுப்பதாக குற்றம்சாட்டிய அவர் கலைஞர்களே சக கலைஞர்களை ஊக்குவிப்பதில்லை என்று சாடினார். காண்பிக்கப்பட்ட குறும்படங்களின் முடிவில் எல்லோரும் கைதட்டாததையிட்டு கோபம் அடைந்த அஜீவன் அதனை அங்கு வெளிப்படுத்தினார். அங்கு கைதட்டுவது பற்றிய ஒரு சர்ச்சை எழுந்து ஓய்ந்தது. அங்கு திரையிடப்பட்ட சுவிஸ் பெண்களின் மேற்கு நாட்டு நடனக்காட்சி அவசியமற்றது என்றும் அதனால் தான் பலர் கைதட்டவில்லை என்றும் இயக்குநர் சண்முகநாதன் தன் கருத்தைத் தெரிவித்தார்.

இச்சந்திப்பில் குறும்படங்களின் தேவை பற்றியும் தொழில்நுட்ப அறிவின் அவசியம் பற்றியும் அழுத்தமாகத் தெரிவிக்கப்பட்டது. புலம்பெயர் மண்ணில் தயாரிக்கப்படும் படங்களுக்கான சந்தைப்படுத்தல் திட்டங்கள் அவசியம் என்றார் டேவிட் ஜோசப். வர்த்தகரீதியில் இப்படங்கள் வெற்றி பெறுவதற்கு சந்தைப்படுத்தல் திட்டங்கள் பற்றிய சிந்தனைகளை அவர் வெளிப்படுத்தினார். நிகழச்சியின் முடிவாக உரையாற்றிய ஈழவர் திரைக்கலை மன்றத் தலைவர், சட்ட அறிஞரும் கலைஞருமான ஜோசப் மிக விரைவில் சில குறும்படங்களைத் தயாரிக்க உள்ளதாகத் தெரிவித்தார்.

# ஒரு இலட்சம் ரூபாய் அன்பளிப்பு

## தாயகத்து மக்களுக்கு கைகொடுக்கிறார்கள் இலண்டன் தமிழர்கள்

இலங்கையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் மனோ வளர்ச்சி குன்றியோர் இல்லமான ஓசானம் இல்லத்திற்கு நண்பர்கள் வட்டம் ஒன்று இணைந்து ஒரு இலட்சம் ரூபாய் அன்பளிப்புச் செய்துள்ளனர். இவ்வில்லத்திற்கு உதவுமுகமாக இராப்போசன விருந்தும் குலுக்கள் பரிசும் பெப்ரவரி 15ம் திகதி ஒழுங்கு செய்யப்பட்டது. இராப்போசனம்

## உதயன் பற்றி...

கடந்த 8 வருடங்களாக தமிழ் சமுதாயத்திற்கு பயன் உள்ள வகையில் சமூக நோக்குடன் தேசிய அளவில் அதிக பிரசுரங்களை கொண்டு வெளியிட்டுக் கொண்டிருக்கும் தமிழ் சமூகத்தின் ஒரே தேசிய பிரித்தானிய செய்தி பத்திரிக்கை பற்றி உங்களுக்கு...

பல ஆயிரம் கணக்கான வாசகர்களின் நன் மதிப்பையும் பாராட்டுக்களையும் பெற்ற உதயனை இலவசமாக வாசிக்க அளிப்பவர்கள்:



டாக்டர். இரவிக்குமார் (சற்குரு சுவாமிகள்)
நிறுவனர்-ஆசிரியர்



அன்னை காயத்ரி
நிறுவனர்-துணை ஆசிரியர்



திரு.த.புஷ்பலிங்கம்
விளம்பர பொறுப்பாளர்



திரு.த.ஜெயபாலன்
மூத்த நிருபர்

துணை நிறுபர் திரு.கே.அரவிந்தன், இரகசிய புலனாய்வு நிருபர்கள் மற்றும் விநியோகிஸ்தர்கள்.

தொடர்புகளுக்கு: **GNM (PVT) LTD.**, 25-27 High St., Edgware, Middx. HA8 7EE
Tel: 020 8952 5677

The UDHAYAN உதயன்
ADVERTISE FOR BEST RESULTS
020 8952 5677

Katherine & King's College of London
Minavil House, Ealing Road, Wembley HA0 4EL
* Excellent Location: opposite Alperton Tube Station, good transportation links
* Multi-Disciplines: Accounting, Management, Computer, English
* Various Levels: From Certificate to Degree suitable for anyone over 16.
* Flexible Payment Options: Ten Monthly Instalments
* Diverse Study Modes: Full-time, Part-time (Daytime, Evening, Weekend.)
* Starting Date Available All Year Round
Please call 020-8795 1600 for more......
Monday – Friday (9am – 6pm)

Boston College of London
The Best College of the year 2002
Certificate, Diploma, Advance Diploma & PGD in
✓ TTH Travel Tourism & Hospitality Management
✓ Business Administration
✓ Hotel Management
✓ Journalism Management
✓ ACCA, CAT (Accountancy)
✓ BBA, MBA, BIT, MIT & PhD
✓ IT
Accredited by the British Accreditation Council for Independent Further and Higher Education
Boston College of London has been named award winner for the year 2002 in the category of International Education & Training by the UK based Leeds & Yorkshire Times in June 2002.
* Small size classes
* Highly qualified lecturers
* Help with visa application & Accommodation
* Airport collection facility
15 Leeland Road, West Ealing, London W13 9HH, UK
Tel: 0044-208-8101 888 Fax: 0044-208 8100848
email: info@bcluk.co.uk
Web: www.bcluk.co.uk

"The UDHAYAN" Published by [Global News Media] GNM (PVT) LTD. in London at, I Floor 25-27 High Street Edgware, Middx. HA8 7EE U.K. Tel: 020 8 905 7775 Fax: 020 8952 5677 e-mail: thelondon@udhayan.freeserve.co.uk

# மலேசிய - இலண்டன் தமிழர்கள் மாநாடு உறவுப்பாலம் அமைக்க முயற்சி



மாநாடில் அரிகிருட்னன் உரையாற்றுகிறார். அவரை அடுத்து கலாநிதி மு நித்தியானந்தன், பொன் முத்து, மோகனப் பெருமாள் ஆகியோர் உள்ளனர்.



போல் சத்தியநேசன் உரையாற்றுகிறார். இடம், வலமாக அமைச்சர் ஸ்ரீபன் ரிம்ஸ், மோகனப் பெருமாள், தருமகுலசிங்கம்

பிரித்தானியத் தலைநகர் இலண்டனில் மலேசிய - இலண்டன் தமிழர்களின் மாநாடு ஏப்ரல் 5ம் திகதி இடம்பெற்றது. இரு தமிழ் சமூகங்களிடையேயும் சமூக, கலாச்சார, இலக்கிய பரிமாற்றத்தை ஏற்படுத்துவதை அடிப்படையாகக் கொண்டு இம்மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது. தலைநகரில் மிகவும் நவீனமயமாக்கப்பட்ட ஸ்ரட்போர்ட் நூலக மண்டபத்தில் இடம்பெற்ற இவ்விழாவுக்கு பிரித்தானியாவில் வாழும் கலை, இலக்கிய ஆர்வலர்களும் சமூகத் தலைவர்களும் கலந்து கொண்டனர். மலேசியாவிற்கு உள்ளேயே முடக்கப்பட்ட மலேசியத் தமிழ் இலக்கியங்களை வெளியே எடுக்க மேற்கொள்ளப்பட்ட முதல் முயற்சி இது என மலேசிய அன்பர்கள் அங்கு கருத்து வெளியிட்டனர்.

இம் மாநாட்டில் திறனாய்வாளரும், மலேசிய உள்துறை அமைச்சின் பத்திரிகைக் கண்காணிப்புப் பிரிவின் (தமிழ்ப் பிரிவு) பொறுப்பாளருமான பொன் முத்து, மலேசிய நண்பன் பத்திரிகையின் தலைமை நிருபர் மோகன் பெருமாள், மலேசிய இன்ரி கல்லூரி விரிவுரையாளரும் திறனாய்வாளருமான க ஹரிகிருஷ்னன் ஆகியோர் கலந்து கொண்டு சிறுப்புரை ஆற்றினர். இவர்கள் முறையே மலேசியத் தமிழ் இலக்கியம் ஓர் அறிமுகம், மலேசியத் தமிழ் பத்திரிகைகளின் தோற்றமும் வளர்ச்சியும், மலேசியத் தமிழ்க் கவிதைகள் என்ற தலைப்புகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளை சபைக்கு சமர்ப்பித்தனர். மலேசியத் தமிழ் இலக்கியத்தின் வளர்ச்சியையும் அம்மக்களின் சமூக, பொருளாதார, அரசியல் நிலையையும் அவர்களது ஆய்வுகள் செழுமையாக புலம்பெயர் தமிழர்களுக்கு அறிமுகம் செய்தது.

இந்நிகழ்ச்சியின் மற்றுமொரு சிறப்பம்சமாக இணைய வர்த்தகத்திற்கு பொறுப்பான அமைச்சர் ஸ்ரீபன் ரிம்ஸ் அவர்களும் அவரது பாரியாரும் இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்டு மலேசிய அறிஞர்களுக்கு ஞாபகார்த்த சின்னங்களை வழங்கி கௌரவித்தனர். நிகழ்ச்சியின் ஏற்பாட்டாளர்களில் ஒருவரான ஜெயபாலன் அமைச்சருக்கு தமிழ் மக்களின் பண்பாட்டை வெளிப்படுத்தும் குத்துவிளக்கு பன்னீர் வரவேற்புத் தட்டை பரிசளித்தார். மலேசிய அறிஞர்களின் வருகையை இட்டு பெருமைப்படுவதாகக் குறிப்பிட்ட அமைச்சர் தனது தொகுதி தொடர்ந்தும் இவ்வகையான மாநாடுகளுக்கு ஆதரவளிக்கும் எனத் தெரிவித்தார். அங்கு உரையாற்றிய நியுகாம் கவுன்சிலர் போல் சத்தியநேசன் அமைச்சர் ஸ்ரீபன் ரிம்ஸ் ஒரு வெள்ளைத்தோல் கொண்ட தமிழர் என்று குறிப்பிட அதற்கு மண்டபம் நிறைந்த கரகோசம் கிடைத்தது. இந்நிகழ்ச்சி ஏற்பாட்டுக் குழுவின் தலைவர் என் செல்வராஜாவுக்கு மோகன் பெருமாள் மலேசிய அறிஞர்கள் சார்பில் பொன்னாடை போர்த்தினார்.

கலாநிதி மு நித்தியானந்தன் காலை நிகழச்சிகளுக்கும் சட்ட அறிஞரும் இலக்கிய ஆர்வலருமான தருமகுலசிங்கம் (டென்மார்க்) மாலை நிகழச்சிகளுக்கும் தலைமை வகித்தனர். அப்பால் தமிழ் (www.appaal-tamil.com) இணையத் தள நெறியாளர் கி பி அரவிந்தன் (பரிஸ்) ஈழம் - மலேசியா ஈழத்து இலக்கியம் சாட்சியம் என்ற தலைப்பிலும் ஐரோப்பியத் திரைப்படக் கழக இணைப்பாளர் அஜீவன் (சுவிஸ்) தமிழகத்துக்கு வெளியே தமிழ் சினிமா என்ற தலைப்பிலும் உரையாற்றினர். நிகழ்ச்சியின் இறுதியில் கலந்துரையாடல் இடம்பெற்றது. மாநாட்டில் கலந்து கொண்டவர்கள் மலேசிய அறிஞர்களுடன் மலேசியத் தமிழர்களின் சமூக, பொருளாதார, கலை, கலாச்சார விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடினர்.

இம்மாநாட்டைத் தொடர்ந்து மலேசிய புலம்பெயர் மக்களிடையே உறவுப் பாலம் அமைக்கும் வழிகள் பற்றி ஆராயப்பட்டது. புதிய செயற் திட்டங்களை நடைமுறைப்படுத்தும் அடுத்த கட்ட நடவடிக்கைகள் விரைவில் ஆரம்பிக்கப்படும் என்ற நம்பிக்கை அங்கு வெளிப்படுத்தப்பட்டது. அனைத்து புலம்பெயர் தமிழ் ஊடகங்களும் மலேசிய அறிஞர்களை வரவேற்றதுடன் அவர்கள் புலம்பெயர் ஊடகங்களால் கௌரவிக்கப்பட்டனர்.

ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக வளர்ந்து வேர்விட்ட மலேசியத் தமிழ் இலக்கியங்களை உலகத் தமிழர்களின் பார்வைக்கு வெளிச்சமிட்டுக் காட்டிய நிகழ்வு இது என பொன் முத்து தெரிவித்தார். தமிழ் இலக்கியங்கள் மட்டுமல்ல தமிழ் நூல்கள் ஒவ்வொன்றும் அவை உலகின் எப்பாகத்தில் வெளிவந்தாலும் பதிவுக்கு உட்படுத்தப்பட வேண்டும் எனத் தெரிவித்த நூலியலாளர் என் செல்வராஜா மலேசியத் தமிழ் நூல்களை ஆவணப்படுத்த முன்வந்து உள்ளார். உலகின் பல்வேறு பாகங்களில் வாழும் தமிழ் மக்களிடையே ஒருமைப்பாட்டையும் புரிந்துணர்வையும் ஏற்படுத்தும் நோக்கின் முதற் கட்டமாக இந்த இலக்கிய நிகழ்வு ஒழுங்கு செய்யப்பட்டு இருப்பதாக த ஜெயபாலன் தெரிவித்தார். இந்த மலேசியத் தமிழர் இலக்கிய நிகழ்வு உலகத் தமிழர் ஒருமைப் பாட்டுக்கு ஒரு முன் உதாரணம் என கவுன்சிலர் போல் சத்தியநேசன் தெரிவித்தார். நிகழ்ச்சிகள் அனைத்தும் மாலை 5:30க்கு நிறைவு பெற்றது. வந்திருந்தவர்களில் 95 வீதமானவர்கள் நிகழ்ச்சியை வரவேற்றிருந்தது அங்கு பெறப்பட்ட புள்ளிவிபரத்தில் வெளிப்படுத்தப்பட்டது.

(2ம் பக்கத் தொடர்ச்சி)

உதவியாளர்களும் நியமிக்கப்பட்டு உள்ளனர். அருட் சகோதரிகள் குடும்பத்தில் இருந்து ஒரு சகோதரி, முளைவளர்ச்சி குன்றிய குழந்தைகளைப் பராமரிப்பதற்கான மேலதிக பயிற்சிகளுக்காக இந்தியாவுக்கு அனுப்பப்பட்டு இரு ஆண்டுகள் பயிற்றப்பட்டதாகவும் சகோதரி ஸ்ரீபனி தெரிவித்தார்.

ஒவ்வொருவரையும் பராமரிக்க மாதம் 2,500 ரூபாய் செலவாவதாகத் தெரிவிக்கப்படுகிறது. இவ்வில்லத்தினர் தமது சேவைகளை தொடர உதவிகளை எதிர்பார்க்கின்றனர். அங்குள்ள ஒவ்வொரு குழந்தையை பொருளாதார ரீதியில் தத்தெடுக்க விரும்புபவர்களை அவ்வில்லத்தினர் வரவேற்கின்றனர். (மேலதிக விபரங்களுக்கு - 0094-65-25946 - Rev Sr Stephanie)

## மலேசிய அறிஞர்கள் பாரிஸில் வரவேற்கப்பட்டனர்

பிரித்தானியாவுக்கு வந்திருந்த மலேசிய அறிஞர்கள் பிரான்ஸின் தலைநகர் பரரிஸிற்கு ஏப்ரல் 10ல் விஜயம் செய்தனர். பாரிஸில் அப்பால் தமிழ் இணையச் சஞ்சிகையும், ஈழமுரசு பத்திரிகையும் மலேசியத் தமிழ் அறிஞர்களை வரவேற்று பாரிஸில் ஒரு சந்திப்பை ஏற்பாடு செய்தனர். ஏப்ரல் 12ல் பாரிஸில் இடம்பெற்ற சந்திப்பில் மலேசிய தூதரகப் பிரதிநிதி ஒருவரும் கலந்து கொண்டார். பாரிஸில் இருந்து 13ம் திகதி இலண்டன் திரும்பிய மலேசிய அறிஞர்களில் விரிவுரையாளர் ஹரிகிருஷ்னன் அன்றே மலேசியா பயணமானார்.

ஐரோப்பாவில் தனக்களிக்கப்பட்ட வரவேற்பிற்கு நன்றி தெரிவித்த அவர் எதிர்காலத்தில் இரு நாட்டுத் தமிழர்களுக்கு இடையேயும் ஒரு உறவுப்பாலத்தை அமைக்கும் அடித்தளமாக இவ்விஜயம் அமைந்ததாக உதயனுக்குத் தெரிவித்தார். இவ்வாண்டு ஈழத்தமிழர் இலக்கியங்களை மலேசியாவில் அறிமுகப்படுத்தும் நிகழ்ச்சி ஒன்றை ஏற்பாடு செய்யப் போவதாக அவர் இலண்டன் தமிழ் மக்களுக்கு உறுதி அளித்தார்.

மலேசிய - இலண்டன் தமிழர்களுக்கு இடையே உறவுப்பாலத்தை ஏற்படுத்தும் வகையில் செயற்பட ஊடகங்கள் சில முன்வந்து உள்ளன. அதன் படி மலேசிய நிகழ்வுகள் பற்றிய செய்திகளும் மலேசியத் தமிழர்கள் பற்றிய படைப்புகளையும் இலண்டனில் பதிப்பிடவும் ஒலி, ஒளி பரப்புச் செய்யவும் அவை முன் வந்து உள்ளன. உதயன் பத்திரிகை தாயகங்களுக்கு வெளியே (தமிழகத்திற்கும் ஈழத்திற்கும் வெளியே) வாழும் தமிழர்கள் பற்றிய செய்தியை வெளியிடுவதில் முக்கிய பங்காற்றி வருவது குறிப்பிடத்தக்கது.

UDHAYAN
HOT NEWS CALL
020 8952 5677

ALLIED MOTORS U.K.
MECHANICAL & CRASH REPAIRS
Specialists in British, Continental and Japanese Cars.
Servicing, repairs, tuning, insurance work undertaken
Breakdown Service
MOT while you wait
Open: MON - FRI 8.30am to 7.00 pm
SAT 8.30am to 5.00pm
Abbey Estate, Mount Pleasent, Wembley, Middx. HA0 1QT
Tel: 020 8903 5466
Fax: 020 8900 0120

Excellent position
Double Unit Vegetarian Restaurant for Sale
658/660 Kingsbury Road, London NW9 9HN
Call Yogi
07811 275522

F/h Shop with 2 Bed Flat
CONVENIENT STORE + Off-Licence
POST OFFICE (7 miles from Croydon)
FOR SALE
Takings - 5,000
P.O. Salary - 16,000
£ 230,000
Tel: 01883 343692

CAM Carpets & Furnitures
NEWLY OPEN Offers Tel: 8903 7350
BUDGET BED £ 59
ORTHOPAEDIC BED £ 89
Italian DINING Set + 6 Chairs & CARPETS £ 535
We can beat any quote
434, HIGH ROAD, WEMBLEY

EDITOR: Dr T RAVIKUMAR Chief Reporter: T.JEYABALAN Advertising Manager: T. PUSHPALINGHAM FREELY Circulated throughout UK, FRANCE & GERMANY

# இறுதிப் பயணம்



படுகொலை செய்யப்பட்ட திலீபன்

மார்ச் 19ம் திகதி இல்போர்ட்டில் கொல்லப்பட்ட திலீபன் தங்கவடிவேலின் (ஜுன்டா) இறுதிப் பயணம் ஏப்ரல் 18ல் நடைபெற்றது. மட்டக்களப்பைச் சேர்ந்த திலீபனின் பெற்றோர்கள் இறுதிக் கிரியைகளில் கலந்து கொள்வதற்காக இலங்கையில் இருந்து வந்திருந்தனர். மனோபார்க்கில் உள்ள ரவிதாஸ் மண்டபத்தில் காலை 11.45 முதல் மாலை 3.45 வரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு அருகில் உள்ள மனோபார்க் செமற்றிக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு அடக்கம் செய்யப்பட்டது.

# 25 இலட்சம் ரூபாய் தண்ணீர் வண்டி

## இலண்டன் வாழ் புங்குடுதீவு இளைஞர்களின் அன்பளிப்பு

இலண்டனில் வாழும் 17 புங்குடுதீவு இளைஞர்கள் இணைந்து 25 இலட்சம் ரூபாய் பெறுமதியான ரா ரா தண்ணீர் வண்டியை புங்குடு தீவு மக்களின் பாவனைக்காக வட இலங்கை சர்வோதயத்திற்கு கையளித்து உள்ளனர். இக்கையளிப்பு வைபவம் மார்ச் மாதம் முதலாம் திகதி வட இலங்கை சர்வோதய சேவை வளாக மண்டபத்தில் இடம்பெற்றது. இவ்வைபவத்திற்கு யாழ் மாவட்ட சிரான் இணைப்பாளர் செ இரத்தினம் தலைமையேற்றார். இளைப்பாறிய ஆசிரியர் சி மாணிக்கம் தமிழீழ விடுதலைப் புலிகளின் புங்குடுதீவுப் பிரதேசப் பொறுப்பாளர் கானகன் ஆகியோர் பிரதம அதிதிகளாகக் கலந்து கொண்டனர். தொண்டர் க திருநாவுக்கரசு அவர்களின் 65 வது ஜெயந்தி தினம் இக்கையளிப்பு விழாவிற்கு தெரிவு செய்யப்பட்டதாக வட இலங்கை சர்வோதயப் பொறுப்பாளர் செல்வி க புஸ்பமணி தெரிவித்தார்.

புங்குடுதீவு மக்களின் குடிநீர்த் தேவையை நிறைவேற்றும் நோக்குடன், புங்குடுதீவில் இருந்து புலம்பெயர்ந்து இலண்டன் மாநகரில் வாழ்ந்து வரும், புங்குடுதீவுக் கிராமத்தின் வளர்ச்சிப் பணிகளில் நல்லெண்ணத்துடனும் அக்கறையோடும் செயற்பட்டு வரும் இளைஞர்களான நலன் விரும்பிகள் இக்குடிநீர் வண்டியை வட இலங்கைச் சர்வோதயத்திற்கு அன்பளிப்புச் செய்ததாக அவ்வமைப்பினர் உதயனுக்கு அனுப்பிவைத்த கடிதத்தில் தெரிவித்து உள்ளனர். தம் கிராமத்தின் இலண்டன் வாழ் நலன் விரும்பிகளுக்கு வட இலங்கை சர்வோதயத்தின் சார்பிலும், புங்குடுதீவு மக்களின் சார்பிலும் நன்றியைத் தெரிவித்துக் கொள்வதாக அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

புலம்பெயர்ந்து இலண்டனில் வாழும் தமிழர்கள் பலர் தாயகத்து மக்களுக்கு தம் உதவிக்கரத்தை நீட்டி உள்ளனர். ஆலயங்கள் செய்யும் உதவிகள் பத்திரிகைகளில் விளம்பரமாக வெளிவர பல தனிநபர்களும் சில அமைப்புகளும் பல சேவைகளை வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது. இந்த வகையில் யாழ்நூலகத்துக்கு நூலக விஞ்ஞானம் தொடர்பாக இலண்டனில் இருந்து அனுப்பப்பட்ட 300க்கும் மேற்பட்ட நூல்கள், வட இலங்கை சர்வோதயத்திற்கு பணம் அனுப்பி மேற்கொள்ளப்பட்ட அறநெறிப் போட்டிகள் குறிப்பிடத்தக்கவை. மேலும் ஹாட்லி கல்லூரிக்கு இரண்டு இலட்சம் ரூபாய் செலவில் அன்பளிப்புச் செய்யப்பட்ட விளையாட்டு மைதானத்துக்கான காணியும் குறிப்பிடத்தக்கது.

இப்படி உதவிகளை வழங்குவோரை உதயன் பத்திரிகை மனமார வாழ்த்துகிறது. அவர்கள் தங்கள் சேவைகளை ஆதாரபூர்வமாக அனுப்பி வைத்தால் அதனை நாங்கள் பிரசுரிப்போம். தங்கள் பெயர்களை பிரசுரிக்காமல் இருக்க விரும்புபவர்கள் என்ன சேவை அல்லது அன்பளிப்பு என்பதை ஆதாரத்துடன் அனுப்பினால் அதனைப் பிரசுரிப்போம். தாயகத்தைக் கட்டி எழுப்ப உதவும் இந்தச் சிறு உதவிகளை ஊக்குவிப்பதன் மூலம் மேலும் பலரை ஆர்வமுடன் அதில் ஈடுபடுத்த முடியும் என உதயன் பத்திரிகை நம்புகிறது.

TRICO SHIPPING WORLDWIDE
Small cartons and large container
Full House packing and shipping to any destination of your choice.
Special Rates:- COUCHIN, TREVENDRAM BOMBAY - CHENNAI
* Two regular shipments to Colombo per month
* Goods arrive within 17days
20 YEARS IN SERVICE
Call us for a friendly personal service
Tel: 020 8888 8787
Fax: 020 8888 5445
E-mail: trico@btclick.com
UNIT 4 - BUILDING C BUSINESS CENTRE, CLARENDON ROAD, WOODGREEN, LONDON N22 6XJ

# யாழ் நூலகத்தின் சர்வதேச இணைப்பாளராக

## பிரித்தானியத் தமிழர் நியமனம்



யாழ் நூலகத்தின் சர்வதேச இணைப்பாளராக நூலகர் என் செல்வராஜா நியமிக்கப்பட்டு உள்ளதாக யாழ் மாநகர ஆணையாளர் இராமலிங்கம் உதயனுக்கு அனுப்பி வைத்த கடிதத்தில் தெரிவித்து உள்ளார். இவர் நூலக அபிவிருத்திப் பணிகளுக்கு இணைப்பாளராகச் செயற்படுவார் என அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

இலங்கையில் வாழ்ந்து புலம்பெயர்ந்து உலகின் பலபாகங்களிலும் வாழ்கின்ற எழுத்தாளர்களின் ஆக்கங்கள் யாழ் பொதுசன நூலகத்துக்கு கிடைப்பது மிகவும் குறைவு என்று குறிப்பிட்டு உள்ள ஆணையாளர் புலம்பெயர் ஆக்கங்கள் நூலகத்தின் இலங்கை நூல்கள் பகுதிக்கு மிகவும் அவசியமாகத் தேவைப்படுவதாக எழுதி உள்ளார். யாழ் நூலகத்தின் அபிவிருத்தியைக் கருத்திற்கொண்டும் அதன் நூற்சேர்க்கையை மேலும் வளம்படுத்தவும் தேசிய ஆக்கங்களைப் பேணிப் பாதுகாக்கவும் புலம்பெயர்ந்த தமிழர்கள் உதவவேண்டும் எனவும் அணையாளர் வேண்டுகோள் விடுத்து உள்ளார்.

தமது படைப்புகளை யாழ் நூலகத்துக்கு அன்பளிப்புச் செய்ய விரும்புபவர்கள் இவ் இலக்கத்துடன் தொடர்பு (0158 270 3786 - என் செல்வராஜா) கொண்டு இலவசமாக அந்நூல்களை இலங்கைக்கு அனுப்பி வைக்கலாம்.

Panesar Electrical Co.
EST 1981
மலிவு விற்பனை
12V LV Lamps 20W/35W/50W Buy 10 for £10.00 and get 2 free!
12W Split Load Consumer Unit RCD + Main Switch 8 MCBs Only £85.95
Mains Spotlight C/W 3x 50w Lamps Only £23.95! Chrome, Brass or White
Xpelair DX100T 4" Timer Fan C/W Wall + Window Kit Only £22.95! While Stocks Last!
OFFERS ONLY AVAILABLE WITH THIS ADVERT
ALL PRICES INCLUDE VAT
364 High Street North, Manor Park, London E12 6PH
Tel: (020) 8472 1873, Fax: (020) 8471 6271

SiGN FiT
The Company of Dynamic Ideas.
Specialist in Illuminated, Non-Illuminated, Menu System & Menu Photos.
Challenge: We will beat any Price.
Best Deal Best Design Best Service
Tel:020 8552 1194
Fax:020 8548 1047 Mob:07956 274762
482 Barking Road, East Ham London E6 2LT
Web: www.signfituk.com E-mail: sales@signfituk.com

உதயன் வாசகர்களுக்கு...
விறுவிறுப்பான உண்மை செய்திகளை தாங்கி வரும் உதயன் செய்தித்தாளினை உங்களின் கைகளிலும் தவழவிட அரிய சந்தர்ப்பம். நீங்களும் சந்தாதாரர்களாக பதிவு செய்து கொள்ளுங்கள் இன்றே.
தபால் மூலமாக உதயன் உங்களின் வீட்டை தேடிவரும் ஒரு வருடத்திற்கு தபால் கட்டண செலவு உள்பட £10 பவுண்கள் மட்டுமே.
உங்களின் காசோலைகளை
GNM (PVT) LTD. (Udhayan-Subscription)
என்ற பேரில் கீழ்காணும் விலாசத்திற்கு அனுப்பவும்:
25/27 High Street Edgware, Middlesex HA8 7EE

பிறந்தநாள் மற்றும் சிறு விளம்பரங்களுக்கு 020 8952 5677

இறையருள் அரசி அன்னை காயத்ரி



வேதனைகள் தீர்க்க வல்லவர், குறைகளை போக்கிட வல்லவர்
இறையருள் அரசி அன்னை காயத்ரி.
உங்களின் வாழ்கையில் ஏற்படும் துன்பங்கள் மாறிடவும் தடைகள் யாவும் விலகிடவும் காணுங்கள் அன்னையின் தரிசனம், விலகாத நோய் விலகும், தீராத பிணி அகலும், மாறாத வேதனைகள் யாவும் நீங்கும். உங்களின் பிரச்சனைகள் எதுவாயினும் தடைநீங்கி வழி பெற்றிட தொடர்பு கொள்ளுங்கள் 020 8952 7775

FUNTASIA
The Party Shop



BALLOON PRINTING
BALLOON DECORATING
HELIUM HIRE
PARTY WARE & NOVELTIES
BRIDAL FAVOURS
SOFT TOYS
FANCY DRESS, WIGS, MASKS
JOKES & MAKE-UP
ADULT JOKES & NOVELTIES
PERSONALISED NAPKINS AND BOOK MATCHES.
RUBBER STAMPS SERVICES
சகலவிதமான வைபவங்களுக்கும் தேவையான அலங்கார சோடனைகளுக்கு நாடுங்கள் Funtasia
229 KENTON ROAD, KENTON, HARROW, MIDDLESEX HA3 0HD
Tel/Fax: 020-8907 1333 www.FuntasiaWorld.com

# கலிபோர்னியாவில் தமிழ்ப் பயிற்சிப் பட்டறை

வரும் யூன் 21 முதல் யூலை 19 வரை வட அமெரிக்கத் தமிழ் இளைஞர்களுக்கான கோடை கால தமிழ் மொழிப் பயிற்சிப் பட்டறை ஒழுங்கு செய்யப்பட்டு உள்ளது. வட அமெரிக்கத் தமிழ் சங்கங்களின் கூட்டமைப்பும் தேசிய இளைஞர் அமைப்பும் இணைந்து இப்பட்டறையை ஒழுங்கு செய்திருப்பதாக கலிபோர்னியாவில் உள்ள தமிழ் ஆர்வலர் ராஜன் உதயனுக்குத் தெரிவித்தார். புலமைப் பரிசில் பெற்று கடந்த ஆண்டு அமெரிக்கா வந்து தற்போது பொறியியலாளராகப் பணியாற்றும் இவர் தமிழ் பற்றிய பின்புலம் இல்லாத மாணவர்களுக்கு இப்பயிற்சி மிகுந்த பலனை அளிக்கும் எனத் தெரிவித்தார்.

தமிழ் அகராதி தெரிந்த 13 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு இப்பட்டறையில் தமிழ் மொழிப் பயிற்சி வழங்கப்பட உள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. மதுரை, கலிபோர்னிய பல்கலைக்கழகங்களில் தமிழை இரண்டாம் மொழியாகக் கற்கும் மாணவர்களுக்கான பாடத்திட்டங்களுக்கமைய இங்கு பயிற்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது. கணணியில் தமிழ், தமிழ் வரலாறு, தமிழர்களின் புவியியல், ஆகிய பாடங்களுடன் தாயம், ஆடுபுலி ஆட்டம், கிட்டிப்புல், பல்லாங்குழி ஆகிய விளையாட்டுக்களும் பயிற்றப்பட உள்ளது.

டியூக் பல்கலைக் கழக மருத்துவ பீட மாணவர் சேரன் செந்தில் குமரன் இப்பயிற்சி வகுப்புகளை நிர்வகிக்கிறார். 1984 - 1990 காலப் பகுதியில் யாழ் பல்கலைக் கழகத்தின் தமிழ்ப் பிரிவுப் பொறுப்பாளராக இருந்த கலாநிதி அ வேலுப்பிள்ளை, கலாநிதி அரசு செல்லையா ஆகியோரும் இப்பயிற்சிப்பட்டறையில் முக்கிய பங்காற்றி வருகின்றனர்.

பெரும்பாலான அமெரிக்க பல்கலைக் கழகங்களில் தங்கள் பட்டங்களைப் பெற்றுக் கொள்ள மாணவர்கள் ஆங்கிலம் தவிர்ந்த இன்னுமொரு மொழியில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். அந்த வகையில் இந்தப் பயிற்சிப் பட்டறையில் கலந்து கொள்ளும் மாணவர்களுக்கு தமிழ் மொழித் தேர்ச்சி கிடைக்கும் என ஏற்பாட்டாளர்கள் நம்பிக்கை வெளியிட்டு உள்ளனர். அமெரிக்காவில் முன்னணியில் உள்ள முதல் 10 பல்கலைக் கழகங்களில் சில இப்பயிற்சிப் பட்டறையில் கிடைக்கும் தேர்ச்சியை ஏற்றுக் கொண்டுள்ளமை இப்பயிற்சிப் பட்டறையின் பெரும் வெற்றியாகக் கருதப்படுகிறது. பின்வரும் பல்கலைக்கழகங்கள் தமிழ்மொழிப் பயிற்சிப் பட்டறையை ஏற்றுக் கொண்டுள்ளன. பிறின்ஸரன் (1ம் இடத்தில் உள்ளது), யேல் (2ம் இடம்), ஸ்ரான்போர்ட் (4ம் இடம்), பென்சுலவேனியா (4ம் இடம்), கொலம்பியா (10ம் இடம்), நோர்த் வெஸ்ரர் (10ம் இடம்) ஆகிய பல்கலைக் கழகங்களே தங்கள் அங்கீகாரத்தை வழங்கி உள்ளன.

இப்பயிற்சிப்பட்டறையில் கலந்த கொள்ள வரும் மாணவர்கள் வீட்டில் தமிழ் பேசும் குடும்பங்களுடன் தங்கவிடப்பட உள்ளனர். இதன் மூலம் மாணவர்கள் பயிற்சிக்கு வெளியேயும் தமிழைக் கற்றுக் கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது.

# மேற்கின் அரங்கில் ஒரு கீழத்தேய இசை - (கொன்ஸ்ரன்ரைன்)

ஏப்ரல் முதலாம் திகதி National Youth Music and Dance மகாநாடு ஒன்று Waterloo இல் உள்ள Ware House தியேட்டரில் வெகு சிறப்பாக இடம்பெற்றது. பிரித்தானியாவில் பல அரசியல் கலை சார்ந்த பிரமுகர்கள் கலந்து கொண்ட இவ்விழாவின் பிரதம அதிதியாக பிரித்தானியாவின் கல்வித்துறை அமைச்சர் மாண்புமிகு Charles Clerk அவர்கள் கலந்து கொண்டார். இவ்விழாவில் திருமதி சிவதாரணி சகாதேவனின் London விணா குழுவின் கூட்டு வாத்திய நிகழ்ச்சியும் இடம்பெற்றது.

இக்கூட்டு வாத்திய நிகழ்ச்சியில் சிந்து, மதுரா யோகராஜா சகோதரிகள் வீணை மீட்டினர். மற்றும் கே ரி சிவகணேசனின் மாணவன் பார்த்தீபன் நாகராஜா வயலினும் திருமதி கமலா பத்மநாதனின் மாணவன் ஆதவன் திருநாவுக்கரசு புல்லாங்குழலும் திரு பாலசசந்திரனின் மாணவன் திவ்யன் தயாபரன் மிருதங்கமும் அபிராமி சகாதேவன் கஞ்சீரா வாத்தியமும் வாசித்தனர். அத்துடன் திருமதி செல்வலக்ஷ்மி இராமகிருஷ்ணனின் மாணவி யாழினி சுதந்திரனின் பரதநாட்டியமும் இடம்பெற்றது. இவ்விரு நிகழ்ச்சிகளும் சபையோரின் அமோக வரவேற்பைப் பெற்றன.

# இரகசிய சிநேகம் பட வெளியீட்டு விழா

## தமிழர்களை எண்ணி பெருமைப்படுகிறோம் - சிவிக் மேயர்

தமிழ் புத்தாண்டு தினத்தன்று இடம்பெற்ற இரகசிய சிநேகம் பட வெளியீட்டு விழாவில் தமிழர்களை எண்ணித் தாம் பெருமைப்படுவதாக சிவிக் மேயர் மேரி கொரியர் தெரிவித்தார். பட வெளியீட்டு விழாவுக்கு சிறப்பு விருந்தினராக அழைக்கப்பட்ட மேரி கொரியர் பங்குபற்றிய கலைஞர்களுக்கு விருதுகளை வழங்கி கௌரவித்தார். இப்படத்தை ஒரு வரலாற்று சாதனை எனக் குறிப்பிட்ட போல் சத்தியநேசன் இந்தியாவுக்கு ஒரு தி ராஜேந்தர் இலங்கைக்கு ஒரு கீர்த்தி என்று குறிப்பிட அங்கு மண்டபம் நிறைந்த கரகோஷம் எழுந்தது. இப்படத்தை இயக்கிய கீர்த்திக்கு கலைஞர்கள் சார்பில் வாழ்த்துப் பா பாடினார் கருணானந்தராஜா. மேலும் கலைஞர்கள் கீர்த்திக்கு ஞாபகார்த்தப் பரிசளித்து கௌரவித்தனர்.

எங்களிடம் ஐஸ்வர்யாராய்கள் இல்லை, கமலஹாசன்களும் இல்லை ஆனாலும் கடின முயற்சியில் இந்தப் படத்தை படைத்து உள்ளோம் எனத் தனது வரவேற்புரையில் குறிப்பிட்டார் கலைஞரும் கவிஞருமான கருணானந்தராஜா. இப்படத்தின் மூலம் ஒரு செய்தி சொல்லப்பட்டு இருக்கிறது எனக் குறிப்பிட்ட அவர் எங்களாலும் முடியும் என்பது தான் அச்செய்தி என்று குறிப்பிட்டார். படப் பாடல்கள் பற்றி ஆய்வு செய்த பேராசிரியர் கோபன் மகாதேவா பாடல்களின் வசனநடை உவமான உவமேயங்கள் பிரமாதமாக அமைந்திருப்பதாகவும் பாடகர்களின் குரல்கள் வசீகரமாக அமைந்ததாகவும் குறிப்பிட்டார். தமிழும் தமிழ் சினிமாவும் வாழ்க என்று வாழ்த்தி அவர் தனது ஆய்வை முடித்துக் கொண்டார்.

சினிமா ஒரு சக்தி வாய்ந்த ஊடகம் எனத் தனது பேச்சை ஆரம்பித்த இயக்குநர் கீர்த்தி ஆனால் சினிமா ஈழத்துக் கலைஞர்களுக்கு கைகொடுக்கவில்லை எனக் குறிப்பிட்டார். அது சினிமா செய்தவர்களின் தோல்வியா? கலைஞர்களின் தோல்வியா? அல்லது சமூகத்தின் தோல்வியா? எனக் கேள்வி எழுப்பினார் கீர்த்தி. ஈழத்து சினிமா வெற்றி அடையாததால் அங்கே இறந்த கால வரலாறு திரைவடிவத்தில் பதிவு செய்யப்படவில்லை எனக் குறிப்பிட்டார். அவர் தனது உரையில் திரையிலும் திரைக்குப் பின்னும் உழைத்த அனைவருக்கும் தனது நன்றியைத் தெரிவித்ததுடன் பார்வையாளர்கள் இந்த சினிமாவை வெற்றி அடையச் செய்ய வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

புலம்பெயர் வாழ்வு, இணையத் தளத்தில் காதல், வன்முறை ஆகிய அம்சங்களை அடிப்படையாகக் கொண்டு பெரும்பாலும் தென் கிழக்கு இலண்டனில் உருவாக்கப்பட்ட இந்த இரகசிய சிநேகம் புத்தாண்டு தினத்தன்று திரைக்கு வந்தது. இது கீர்த்தி சினி ஆர்ட்சின் முதலாவது முழுநீளத் திரைப்படம் மட்டுமல்ல பெரும்பாலும் அனைத்துக் கலைஞர்களுக்கும் இது ஒரு அறிமுகம் என்ற வகையில் இது ஒரு பெரும் வெற்றி எனக் குறிப்பிட்டார் சிஐ டிவி நிகழ்ச்சி முன்னிலையாளர் பிரசன்னா. தமிழக சினிமாவுக்கு மிகுந்த அனுபவம் இருப்பதாகக் குறிப்பிட்ட தமிழகத்தைச் சேர்ந்த இவர், இலங்கையில் இருந்து சினிமா தெரியாமல் வந்து இதனைப் படைத்து உள்ளார்கள் என்பது ஒரு பெரும் வெற்றி என பிரசன்னா பாராட்டினார். இலங்கைத் தமிழ் மொழிநடை சினிமாவுக்கு ஏற்றதாக ஆக்கப்பட்டு உள்ளதாக மற்றுமொரு ஆர்வலர் பாராட்டினார். நகைச்சுவைக் கட்டங்கள் பார்வையாளர்களை சிரிக்க வைத்தது.



இயக்குநர் - கீர்த்தி

எதிர்காலத்தில் கீர்த்தி சினி ஆர்ட்ஸ் இன்னும் தரமான படைப்புகளைத் தரும் என்பதற்கு இந்தத் திரைப் படம் கட்டியம் கூறி உள்ளதை பார்வையாளர்கள் வெளிப்படுத்தினர். ஒவ்வொருவரும் இந்தத் திரைப்படத்தைப் பார்க்க வேண்டும். அது பற்றிய தம் கருத்துக்களை இயக்குநருக்கும் கலைஞர்களுக்கும் தெரியப்படுத்த வேண்டும். இதுவே புலம்பெயர் சினிமாவை வளர்க்கும் எனத் தெரிவித்தார் எஸ் வாணன். அவர் மேலும் தெரிவிக்கையில் கீர்த்தியின் இரகசிய சிநேகம் புலம்பெயர் சினிமாவின் மைல் கல் எனப் பாராட்டினார். மேலும் நாம் இன்னும் நெடுந்தூரம் போக வேண்டும் என்றும் வாணன் குறிப்பிட்டார்.


# சமாதானமும் சமஸ்டியும்

மார்ச் 28 - 30 வரை ஜேர்மன் மூனிச் நகரில் சமாதானப் பேச்சும் இலங்கை இன முரண்பாட்டுக்கு சமஸ்டித் தீர்வும் என்ற தலைப்பில் கலந்துரையாடல் இடம்பெற்றது. மூனிச், பேர்லின் இலங்கை நண்பர்கள் வட்டம் இக் கலந்துரையாடலை ஏற்பாடு செய்தது.

Suscribe Udhayan only £10 p.a.

DISCOUNT CARPETS & FURNITURE
* Large selection of Carpets, Vinyl, Beds & Wood Flooring
* Unbeatable Warehouse Prices To the Public
* Call us on
020 8838 4232 / 4248
Fax: 020 8838 4233
Unit C Corner of Bashley Road & St. Leonards Road Park Royal, London NW10 6ST


MALIK DOUBLE GLAZING LTD
Manufacturers, Suppliers & Installers of Double Glazing, UPVC and Aluminium Windows, Doors, Patio Doors & Porches
Trade & Retail Welcome
020 8459 8811
www.malikdoubleglazing.co.uk Fax: 020 8459 8844
202 Church Road, Willesden, London NW10 9NP



KUDOS CONTRACT FURNITURE
Quality furniture to suit your budget
Single Bed From £49.95
Double Bed From £79.95
BARGAIN PRICES
Call us on
020 8893 6192
07887720960
357, Uxbridge Road, Southall

FURNITURE KING
SPECIAL OPENING OFFERS
LIMITED STOCK BUY NOW!
3pc SUITE Ex Display From £249.99
Table + 4 Chairs From £99.99
Pine Wardrobes £99.99
Pine 5+2 Chest £79.99
+ much much more
Single Beds £39.99
Double Beds £99.99
Many Special Lines
Call us on 020 8931 8686
BELMONT CIRCLE, HARROW
Fax: 020 8931 8685

QUALITY RIGID KITCHENS
Suppy Only or Suppy & Fit
* Replacement Doors available any size
* Made to measure Bedrooms
* All makes of Appliances
* Trade account welcome



HEATHROW KITCHENS
140 UXBRIDGE ROAD, HAYES
FAX: 020 8581 1005
020 8813 6952

## நூல் வெளியீடு

The Lawyer Who Rocked The UN என்ற ஆங்கில நூல் வெளியீட்டு விழா ரூற்றிங் லோலா ஜோன் □ோலில் ஏப்ரல் 18ல் இடம்பெற்றது. பேராசிரியர் கோபன் மகாதேவா தலைமையில் இடம்பெற்ற இவ்விழாவில் குறொய்டன் கவுன்சிலர் மைக்கல் செல்வநாயகம், ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம், எரிக் கிறொத்தர், இலண்டன் தமிழ்ச் சங்கம் அசோகன், பி ஜே பி யின் பிரிவான விஸ்வ ஹிந்து பரிசத் இலண்டன் பிரதிநிதி கிசோர்பாய் முன்னாள் மேயர் சின்னமணி ஆகியோர் நூல் பற்றி உரை ஆற்றினர். விட்டா பயோற்றிஸ் உரிமையாளர் கிர்ரர் லல்வானி பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார்.

ஐ நா வில் இலங்கை இனப்பிரச்சினையை எடுத்துரைத்த வைகுந்த வாசன்(83) அவர்களின் வாழ்க்கை வரலாற்றை நூலுருவாக்கி உள்ளார் இலண்ட முரசு ஆசிரியர் சபாபதிப்பிள்ளை சதானந்தன். இலண்டன் முரசு இலண்டனில் வெளிவந்த முதல் தமிழ் பருவ இதழ் என்பது குறிப்பிடத்தக்கது.

## மெகா ஸ்டார் நைட் 2003

இலண்டனில் நீண்ட இடைவேளைக்குப் பின் நட்சத்திர இரவு நிகழ்ச்சி ஒழுங்கு செய்யப்பட்டு உள்ளது. மே மாதம் வெம்பிளி அரினாவில் நடைபெறும் இந்நிகழ்ச்சிக்கு கோடம்பாக்கத்தின் முன்னனி சினி நட்சத்திரங்கள் வருகை தர உள்ளன. ஒளிப் பெட்டிக்குள் நிழல் பிம்பங்களாகப் பார்த்த அபிமான நட்சத்திரங்களை நேரடியாக பார்க்கும் ஒரு நல்ல வாய்ப்பு இது என ஹரோவில் வாழும் விஜயகாந்தின் ரசிகர் சுதன் தெரிவிக்கிறார்.

விஜயகாந்த், பார்த்தீபன், சிறிகாந், சிநேகா என ஏராளமான கலைஞர்கள் வெம்பிளி அரினாவில் இலண்டன் தமிழர்களைச் சந்திக்க வருகின்றனர். அங்கு இக் கோடம்பாக்கக் கலைஞர்கள் தம் சினிமாக் கலைத் திறைமைகளை இலண்டன் தமிழ் மக்களுக்கு காண்பிக்க உள்ளனர். ரோஜா கம்பைன்ஸ் யூகே லிமிடட் இந்நட்சத்திர இரவை ஒழுங்கு செய்துள்ளது. ஆயிரக் கணக்கான தமிழர்கள் இந்நிகழ்ச்சியில் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

முன்னனி நட்சத்திரங்கள் பலர் பெரும் அளவில் கலந்து கொள்வது இதுவே முதல் முறையாகும்.

# மன்னார் - அரியாலை காழ்ப்புணர்ச்சி கொலையில் முடிந்தது

# வெம்பிளியில் மூன்றாவது கொலை வழக்கு

சுரேஸ்குமார் செல்வராஜாவின் (26) கொலை வழக்கு வடக்கு இலண்டன் ஓல்ட் பெயிலி கிரிமினல் நீதிமன்றத்தில் மார்ச் இறுதிப் பகுதியில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. அரவிந்தன் முத்துக்குமாரசுவாமி (25), சுபேந்தர் இராமச்சந்திரன் (18) ஆகிய இரு இளைஞர்கள் கொலையிலும் குற்றம் சாட்டப்பட்ட வெம்பிளியில் உள்ள செட்ஸ்வேர்த் அவெனியூவில் வசித்த செந்தமிழ் தில்லைநாதனின் (22) வழக்குப் பற்றிய விபரம் கடந்த உதயன் இதழில் வெளிவந்ததை அறிந்திருப்பீர்கள். எட்டு மாத இடைவெளியில் இடம்பெற்ற இவ்விரு கொலைகளையும் செந்தமிழும் அவரது கோஷ்டியும் செய்ததாக காவல்துறையினர் குற்றம் சாட்டி உள்ளனர். அவ்வழக்கு விசாரணை இன்னமும் தொடர்கிறது.

இவ்வழக்குகள் விசாரணைக்கு உட்பட்டு இருந்த காலப் பகுதியில் மார்ச் 19, 2003ல் இல்போர்ட் ஹென்லி வீதியில் மட்டக்களப்பைச் சேர்ந்த திலீபன் தங்கவடிவேல் (23) ஜுன்டா என்ற இளைஞர் வெட்டியும் சுட்டும் கொல்லப்பட்டார். இக்கொலையை வெம்பிளி கோஸ்டியே மேற்கொண்டதாக சந்தேகிக்கப்படுகின்றது.

**சுரேஸ்குமார் செல்வராஜா கொலை :**

சுரேஸ்குமார் செல்வராஜா 2002 ஏப்ரல் 22ல் லையன் பார்க் அவெனியூவில் உள்ள தனது வீட்டில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டார். இவ்வழக்கு வெம்பிளியில் இடம்பெற்ற மூன்றாவது கொலை வழக்காக தற்போது விசாரணைக்கு வந்து உள்ளது. இக்கொலை தொடர்பாக 19 முதல் 40 வயது வரையான 13 இலங்கைத் தமிழர்கள் அப்பகுதியில் இருந்த இரு முகவரிகளில் இருந்து கைது செய்யப்பட்டனர். ஒருவர் வெம்பிளி நோர்த் சேச் றோட்டிலும் மற்றும் பன்னிருவரும் பிரண்ட்வலே அவெனியூவில் இருந்தும் கைது செய்யப்பட்டனர். அங்கிருந்து அச்சமயம் இரு வாள்கள் பொலிஸாரால் மீட்கப்பட்டது.

**சந்தேக நபர்கள் :**

சுரேஸ்குமார் செல்வராஜா கொலையில் பிரண்ட்வலே அவெனியூவைச் சேர்ந்த ராகுல் சச்சிதானந்தன் (26) பிரதான கொலையாளியாக குற்றம் சாட்டப்பட்டுள்ளார். ராகுலே அரியாலை கோஸ்டியின் தலைவர் என இனம் காணப்பட்டது. பிறஸ்போர்ட் அவெனியூவைச் சேர்ந்த திருராஜா கனகநாயகம் (25), நோர்த் சேச் றோட்டைச் சேர்ந்த நாகராஜா சிவக்குமார் (33), றுஸ்ச்குறொவ் றோட்டைச் சேர்ந்த விஜய் குமாரவேல்சிங்கம் (31) ஆகியோர் இக்கொலையில் ஏனைய குற்றவாளிகளாக குற்றம் சுமத்தப்பட்டு உள்ளனர்.

**மன்னார் அரியாலை மோதலும் பின்னணியும் :**

அரியாலை கோஸ்டி மன்னார்ப் பகுதியைச் சேர்ந்தவர்கள் மீது கடுமையான வெறுப்பையும் வஞ்சத்தையும் கொண்டிருந்ததாகவும், பிரித்தானியாவுக்கு வரும் போது அவர்கள் இந்த வஞ்ச உணர்வுகளையும் கொண்டு வந்ததாகவும் அரசதரப்பு சட்டத்தரணி கியூசி ஜோன் ஹில்டன் நீதி மன்றில் கொலையின் பின்னணியை விளக்கினார். அவர் தொடர்கையில் 2001ல் அரியாலையைச் சேர்ந்த ஒருவரின் கொலை தொடர்பாக மன்னாரைச் சேர்ந்த பார்த்தீபன் பரமலிங்கம் கைது செய்யப்பட்டு குற்றம் சுமத்தப்படாமல் விடுவிக்கப்பட்டதாகவும், அச்சம்பவம் அரியாலை கோஸ்டியிடம் பெரும் பதட்டத்தை ஏற்படுத்தியதாகவும் ஹில்டன் தன் வாதத்தைத் தொடர்ந்தார்.

**முகவரியைத் தேடிக் கடத்தல் :**

அரியாலை கோஸ்டியின் நோக்கத்தைப் பற்றி குறிப்பிட்ட அரச தரப்புச் சட்டத்தரணி □ில்டன் கடையில் வேலை செய்யும் சின்னையா சத்தியசிவம் வில்ஸ்டனில் வைத்து மாலை 9 மணியளவில் கடத்தப்பட்டு பரமலிங்கம் பார்த்தீபனின் முகவரியைக் கேட்டு சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டதாகக் குறிப்பிட்டார். சுரேஸ்குமார் செல்வராஜா அவரது வீட்டில் வைத்து சுட்டுக் கொல்லப்படுவதற்கு 4 நாட்கள் முன்பாக ஏப்ரல் 18ம் திகதி சின்னையா சத்தியசிவம் கடத்தப்பட்டார். இவரைக் கடத்திச் சென்ற கோஸ்டித் தலைவன் ராகுல் தனது படுக்கையில் அவரை வீசி கறுப்புப் பிளாஸ்டிக் பைப்பால் அடித்து வதைத்து விட்டு தெருவோரத்தில் வீசிவிட்டு வந்ததாக □ில்டன் யூரிகளுக்குத் தெரிவித்தார்.

**வீடு சுற்றி வளைப்பு :**

இக்கடத்தல் இடம்பெற்று 3 நாட்களின் பின் பார்த்தீபன் பரமலிங்கத்தின் வீடு முற்றுகையிடப்பட்டது. முற்றுகையிட்டவர்கள் கல்லுகள் பொல்லு ஆகியவற்றை வைத்திருந்ததுடன் யன்னலை அடித்து நொருக்கியதாகவும் யூரிகளுக்கு தெரிவிக்கப்பட்டது. மேலும் அதில் ஒருவன் 'இன்று எனக்கு ஒரு துவக்கு வேணும்' என்று தனது கைத்தொலைபேசியில் கேட்டதாகவும் அங்கு சொல்லப்பட்டது. அத்தொலைபேசி இணைப்பின் சாட்சியம் கோஸ்டித் தலைவன் ராகுல் சச்சிதானந்தன், நாகராஜா சிவக்குமார், திருராஜ் கனகநாயகம் ஆகியோர் அப்பகுதியில் உலாவியதை உறுதிப்படுத்தியதாக ஹில்டன் நீதிமன்றத்திற்கு விளக்கினார்.

மேலும் இரண்டரை மணிநேரத்திற்குப் பின்னர் ஒரு வேட்டுத் தீர்க்கப்பட்டதாகவும் பின்னர் மறுநாள் அதிகாலை மற்றுமொரு வேட்டுத் தீர்க்கப்பட்டதாகவும் அது அயல்வீட்டுக்காரரின் வாயிலைத் தாக்கியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

**காரில் துரத்திச் சென்றனர் :**

வேட்டுக்கள் தீர்ந்து பின்னர் சற்று நேரம் சென்ற பின் மேலே குறிப்பிட்ட சந்தேக நபர்களுடன் கிருஷ்ணபிள்ளை (37) என்பவனும் இணைந்து பார்த்தீபன் பரமலிங்கத்தை காரில் துரத்திச் சென்றதாக நீதிமன்றுக்கு தெரிவிக்கப்பட்டது. வெம்பிளி றோட்டில் இந்த கோஸ்டி துரத்திச் சென்று பார்த்தீபன் பரமலிங்கத்தை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளனர். அச்சன்னம் பார்த்தீபன் பரமலிங்கத்தின் பிற்பகுதி கண்ணாடியை சேதப்படுத்தியதாக அங்கு கூறப்பட்டது. அதனைத் தொடர்ந்து ராகுல் சச்சிதானந்தம் தனது கைத்தொலைபேசியில் பார்த்தீபன் பரமலிங்கத்துக்கு போன் செய்து □அடுத்தது உன் தலைக்கு. யோசிக்காதை அடுத்த தடவை நிச்சயம்□ என்று தெரிவித்துள்ளான் என்று ஹில்டன் தன் வாதத்தை தொடர்ந்தார்.

இதற்கு முன்னரும் மார்ச் மாதம் வெம்பிளியில் இருந்த மைத்துனர் வீட்டுக்கு தனது வொல்ஸ்வகன் கொல்பில் சென்று கொண்டிருந்த பார்த்தீபன் பரமலிங்கத்தை வாள்கள், பொல்லுகளுடன் சென்ற ராகுல் தலைமையிலான அரியாலை கோஸ்டி துரத்தியதாகவும் பின்னர் பரமலிங்கம் பார்த்தீபன் வரும்வரை வீட்டுக்கு வெளியே அக்கோஸ்டி காத்திருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. சில தினங்கள் பின்னர் 'நான் பாம்புக் கோஸ்டியில் இருந்து வந்திருக்கிறேன். நான் உன்னையும் உனது குடும்பத்தையும் உனது பொம்பிளையையும் சுட்டுக் கொல்வேன்' என ராகுல் மிரட்டியதாக அரசதரப்புச் சட்டத்தரணி தெரிவித்தார்.

**ஆள்மாறாட்டம் :**

பார்த்தீபன் பரமலிங்கத்தை காரில் துரத்திச் சென்ற ஜவரும் அதே தினம் சற்று தாமதமாக மாலை 8 மணி அளவில் அவருடைய வீட்டுக்குச் சென்று கதவைத் தட்டியதாகவும் பார்த்தீபன் பரமலிங்கத்தின் தாயார் திருமதி பரமலிங்கத்திடம் பார்த்தீபனை விசாரித்து உள்ளனர் என்றும் ஸில்டன் கூறினார். அத்தாயார் இல்லை என்று பதிலளிக்க அவரை தரையில் தள்ளி வீழ்த்தி விட்டு யன்னலை அடித்து நொறுக்கினர். தாயார் சமையலறையை நோக்கி ஓடினார். இரண்டு துப்பாக்கிச் சத்தங்கள் கேட்டது. சுரேஸ்குமார் செல்வராஜா மாடியை நோக்கிப் படிகளில் ஏறினார். ஆனால் இடையிலேயே சுருண்டு விழுந்து இறந்தார்.

மேலே இருந்து கீழே வந்த செல்லையா பரமலிங்கம் (பார்த்தீபனின் தந்தை) கீழே நால்வர் நிற்பதைக் கண்டார். அவர்களில் இருவர் துப்பாக்கியுடனும் ஒருவர் கிரிக்கற் பற்றுடனும் நின்றிருந்தனர். துப்பாக்கியுடன் வந்தவர்களில் ஒருவன் தந்தை செல்லையா பரமலிங்கத்தைச் சுடுவதற்காக குறிவைத்து விசையை அழுத்திய போது துப்பாக்கியின் குறி தவறியதால் அந்த நான்கு பிள்ளைகளின் தந்தை உயிர் தப்பியதாக அங்கு தெரிவிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து வந்தவர்கள் தப்பிச் சென்றனர்.


சுரேஸ்குமார் செல்வராஜாவின் மைத்துனர் பார்த்தீபன் பரமலிங்கம் (திருமதி சுரேஸ்குமாரின் சகோதரர்) என்பவரைத் தேடி வந்த ராகுல் தலைமையிலான அரியாலை கோஸ்டியே சுரேஸ்குமார் செல்வராஜாவை கடந்த ஆண்டு ஏப்ரல் 22ல் மார்பில் சுட்டுக்கொன்றது. தேடி வந்த பார்த்தீபன் பரமலிங்கம் வீட்டில் இல்லாததால் சுரேஸ்குமார் செல்வராஜாவை அக்கோஸ்டி சுட்டுக் கொன்றதாக நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.

சுரேஸ்குமார் செல்வராஜாவை கொலை செய்தார்கள் என்ற குற்றச்சாட்டையும் பார்த்தீபன் பரமலிங்கத்தை கொலை செய்தார்கள் என்ற குற்றச்சாட்டையும் குற்றம் சாட்டப்பட்ட நால்வரும் மறுத்து உள்ளனர். மேலும் சின்னையா சத்தியசிவத்தைக் கடத்திய குற்றத்தையும் ராகுல் சச்சிதானந்தன் மறுத்துள்ளான். வழக்குத் தொடர்கிறது.

## குடிவரவு அதிகரிக்கிறது

அடுத்த கால் நூற்றாண்டில் பிரித்தானியாவின் மக்கள் தொகை 4.3 மில்லியனால் அதிகரிக்க உள்ளதாக ஏப்ரல் 24ல் வெளியிடப்பட்ட அரச புள்ளிவபரம் தெரிவிக்கிறது. இதல் மூன்றில் இரண்டு பங்கினர் அண்ணளவாக 3 மில்லியன் மக்கள் வெளிநாடுகளில் இருந்து பிரித்தானியாவுக்குள் வருபவர்களாக இருப்பார்கள் என தேசிய புள்ளி விபர அலுவலகம் தெரிவிக்கிறது. தற்போது 58.8 மில்லியனாக உள்ள பிரித்தானிய மக்கள் தொகை 2026ல் 63 மில்லியனாக உயர உள்ளது. இந்த உயர்ச்சியில் 60 வீதம் வெளிநாட்டு குடிவரவாக அமைய உள்ளது. இதனால் சிறுபான்மையினரின் மக்கள் தொகை சற்று உயர இருக்கிறது. இந்தக் குடிவரவு பிரித்தானிய மக்களுக்கு மிகவும் அவசியமானது என மக்கள் தொகை நிபுணர்கள் கருதுகின்றனர்.

For News & Advertising: 020 8952 5677 For Distributions : 020 8905 7775


Palm Beach Restaurant
Roja Combines
Moonbay
Proudly Present's
TAMIL MEGA
STAR NIGHT 2003
தமிழ் மெகா
ஸ்டார் நைட் 2003
ஐம்பதிற்கும் மேற்பட்ட முன்னணி நட்சத்திரங்கள்
பங்கேற்கும் கலை நிகழ்ச்சி
Venue :
WEMBLEY ARENA
Date : 11.05.2003 at 5.00 p.m
For Reservation Contact
ROJA COMBINE UK LIMITED
Contacts:
020 8385 2233
Guna - 07956 198 720
Ruban - 07956 198 721
David - 07956 198 722
£100 £75 £50 £30

# UNBEATABLE PRICES

*** TILES * MARBLE * GRANITE * KITCHENS * BATHROOM * WOODFLOORING * FURNITURE**

**MASSIVE SALE**




**MASSIVE SALE**

# ELITE

ELITE TILES are undeniably UK's No.1
Importers, Distributors, Wholesalers and Retailers
of




*Specialists in Granite Worktops and Marble Vanity Tops to order*




## £2 MILLION POUNDS OF AVAILABLE STOCK TO CLEAR

**(collect same day)**

Web Site: www.elite-tiles.co.uk

**020 8202 1806 (12 lines)**
**020 8202 8608 (Fax)**
**Elite House, The Broadway,**
**West Hendon, London, NW9 7BP**

Open Mon-Fri 8.30am-6pm - Sat 10am-5pm - Sun 10am - 2pm

The UDHAYAN
உதயன்
UK's No.1 National Tamil Newspaper
ADVERTISE FOR BEST RESULTS 020 8952 5677

இந்து தகவல் ஏடு
இரண்டாம் வெளியீடு 2003
மிக அதிக புதிய விளக்கங்களுடன்
விரைவில் வெளிவருகிறது



கண்ணியமான நல்ல நோக்குடன் வெளிவரும் இந்த இந்து சமய தகவல் ஏட்டினை ஒவ்வொருவரும் விரைந்து சென்று பெற்றிடுவீர்
இலவசம் இலவசம் இலவசம்

# கலாச்சார மாலை

செயில்ஸ்பறி 2ம் நிலைப் பள்ளியில் மட்டக்களப்பு சிவானந்தாக் கல்லூரியின் கலாச்சாரமாலை நிகழ்ச்சி இடம்பெற்றது. ஏப்ரல் 12ம் திகதி இடம்பெற்ற இந்நிகழ்ச்சிக்கு அக்கல்லூரியின் பழைய மாணவரும் தமிழ் மற்றும் ஆங்கில அறக்கட்டளை அமைப்புகளின் முக்கிய உறுப்பினராக இருக்கும் திரு ரி ஜீவரட்ணம் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். கல்லடி உப்போடையில் உள்ள இக்கல்லூரி மட்டக்களப்பு மாவட்டத்தில் மிகவும் பிரபல்யமான கல்லூரி என்பது குறிப்பிடத்தக்கது. விழாவுக்கு டொக்டர் கங்காதரன் தலைமை தாங்கினார்.

# சக்கை உணவு

சத்தற்ற, கொழுப்பு நிறைந்த உணவுப் பழக்கம் இளவயதினரிடையே அதிகரித்து வருகிறது. கடந்த காலத்தைக் காட்டிலும் தற்போது அதிகமாக இளவளதினர் இந்த உதிரி உணவுப் பழக்கத்தை கொண்டிருப்பதாக அண்மைய ஆய்வு ஒன்று தெரிவிக்கிறது. பிரித்தானியாவில் உள்ள 11 - 16 வயதுச் சிறுவர்களில் மேற்கொள்ளப்பட்ட ஆயிவில் இலண்டனில் உள்ள சிறார்களே உணவுப் பழக்கத்தில் மோசமாக உள்ளனர் எனத் தெரியவந்து உள்ளது. பழங்கள், மரக்கறிகளின் அவசியம் தற்போது மிகவும் வலியுறுத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

உங்களின் வரி விளம்பரங்களுக்கு
உதயன் 020 8952 5677

BEST TRADE CENTRE
Need a Car ?
Can't get finance ?
WE CAN HELP
No Deposit - Drive away
TODAY in
one of our great cars
NO Application Refused
CALL
020 8514 0988
763 Romford Road, Manor Park E12
Email: info@besttradecentre.co.uk

16 Minerva Road
Park Royal
London NW10 6HJ UK
Shiv Souvenirs Ltd
Importers and Wholesale Distributors
Fancy Goods TOYS gifts Souvenirs and many more
Tel: 020 8963 0512/3
Fax: 020 8963 0518
Email:shivsouvenirs@aol.com

Triangle
Cars & Couriers
348 a High Road
Wembley
Middlesex
HA9 6AZ
24 Hour
Radio Control
Tel 020 8902 8888
Tel 020 8795 1414
Fax 020 8795 1313

KUCHH NAI
SCOTCH WHISKY





"NOTHING" Tastes Better
"மீண்டும் மீண்டும் சுவைக்கத் தூண்டும் குச் நய் விஸ்கி"
TRADERS WELCOME
All other products also at wholesale prices
DRINKS ENTERPRISE
Cash & Carry Ltd.
Please call us on
020 8893 6000
Fax: 020 8893 5943
email: sales@drinks-enterprise.com
Lion House, Bridge Road, Southall, Middx. UB2 4AB

Hall Hire



திருமணம், பிறந்தநாள் வைபவங்கள், மீட்டிங்குகள், கலை-கலாச்சார நிகழ்ச்சிகள், கருத்தரங்குகள், மற்றும் இதர வைபவங்களுக்கு பாக்ஸ் ஓபீஸ், 200க்கும் மேற்பட்ட இருக்கை வசதி, 350பேருக்குறிய கொள்ளளவு, அன்மையில் புதுப்பிக்கப்பட்டதும், டாய்லட், ஒலிபெருக்கி இயந்திரங்கள், சிறப்பு அதிக ஒளி-விளக்குகள், சீறியல் அலங்கார விளக்குகளுடன் முதல் மாடியில் அமைந்துள்ள அருமையான இந்த ஹாலை புக் செய்ய நாடுங்கள் 020 8905 7775
(விதிமுறை: மாமிச உணவு, மதுபானம் அருந்துதல், உள்ளுக்குள் புகைபிடித்தல் தவிர்க்க வேண்டும்.)



Hardwood & Laminate Flooring Centre
3 Ply Flooring
13.99+VAT
Quality Floor at Competitive Price at
Hardwood & Laminate Flooring Centre
306 Honeypot Lane
Stanmore
020 8204 2333

LONDON
BUILDING
SUPPLIES
Tel: 020 8453 0880
Building Materials
Bricks
Blocks
Plaster
Cement
Sand
Aggregates
Concrete



Decorating Materials
Paints
Tools
Ladders
Doors
Windows
Key Cutting
Protective Clothes
Hard Landscaping Display for your IDEAS
அனைவரையும் வரவேற்கின்றோம்
Abbey Road, Park Royal NW10

Euro Glazing
Windows, Doors, Porches, Conservatories
உயர்ந்த தரம், நிறைந்த சேவை மற்றும் மிகுந்த சேமிப்புக்கு நாடுங்கள்
020 8574 9494



We give guarantee for our quality products ranges we supply.
Our professional staffs are highly skilled to fit Windows, Doors, Porches, Conservatories...
Just one call away to make your home complete
Unit 7, Barrett Industrial Park, Park Avenue, Southall, Middlesex UB1 3AF
Tel: 020 8574 9494 Fax: 020 8574 8989

நாளொன்றிற்கு
£25 வீதம்
மாதம் 6
நாட்கள் வரை
நிரந்தரமாக
வேலை
வேண்டுமா?
020 8952 5677

# அமுதுவின் மேடையில் இந்திரகுமாரின் கும்மாளம்

அமுதுவின் கவிதைகள் என்ற 240 பக்கங்களைக் கொண்ட கவிதைத் தொகுதியொன்று அண்மையில் இடம்பெற்றது. இக்கவிதைத் தொகுப்பு புலவர் மணி இளவாளை அமுது அவர்களால் கடந்த 50 வருடங்களுக்கு மேலாக வடிக்கப்பட்ட பல கவிதைகளை உள்ளடக்கி இருந்தன. இத்தொகுப்பு எவ்வித குறிப்பிட்ட உள்ளடக்கத்தையும் கொண்டிருக்காமல் பலருக்கும் புகழாரம் சூட்டி இருந்தது.

இவ்விழாவிற்கு சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றிய அருள் கஸ்பார் ராஜ் அடிகளார் இந்நூலை 'தமிழ் பேசும் மக்கள் அனைவரும் கட்டாயம் படிக்க வேண்டிய Vision statement' எனக் குறிப்பிட்டார். இந்த அவியலுடன் மட்டும் நிறுத்திக் கொள்ளாத கஸ்பார் அடிகளார் மேலும் ஒரு படி மேலே சென்று 'மரபுக் கவிஞர்கள் வரிசையில் கவிஞர் கண்ணதாசனுக்கு அடுத்து அமுதுவைத் தான் குறிப்பிடலாம்' என ஒரு பெரிய கல்லைத் தூக்கிப் போட்டார்.

இவ்விழாவில் மற்றுமொரு சிறப்புரை நிகழ்த்திய இந்திரகுமார் தனக்கே உரிய வாய்வீச்சுப் பாணியில் சவால்கள், வேண்டுகோள்கள் என வீராப்புக்களை சரளமாக அடுக்கிக் கொண்டே போனார். இந்திரகுமார் பேசவரும் கூட்டங்களை மாலை நேரத்தில் கூட்டுவது எவ்வளவு ஆபத்தான விடயம் என்பதற்கு இந்த நூல்வெளியீட்டு விழாவும் ஒரு நல்ல உதாரணம். (மாலையில் அவர் பேசுவதில்லையாம் ஜொனி வோக்கர் தான் பேசுமாம்.) இந்திரகுமார் தனது சிறப்பு(ளுகு)ரையில் இன்றிலிருந்து ஓராண்டு காலத்தில் அமுது புலிநானூறு படைப்பார் என இன்னுமொரு வெடியொன்றை வெடித்தார்.

இளவாளை அமுது தனது நூல் வெளியீட்டு விழாவில் ஏன் பிரபல கோமாளி இந்திரகுமார் மற்றும் ஜெயதேவனுடன் சேர்ந்து ஈழபதீஸ்வர ஆலய மோசடியில் ஈடுபட்ட தங்கராஜா மற்றும் கோபால் ஆகியோரை துணைக்கு இழுக்க வேண்டும் என்பது தான் புரியாத புதிராக இருந்தது.

மற்றும் இந்நூலின் முதற்பக்க பதிப்புரையில் 'தம்பி தமிழ் அரங்கம்' பண்டத்தரிப்பு எனத்தலைப்பிட்ட கடிதம் ஒன்றும் பிரசுரிக்கப்பட்டிருந்தது. தமிழ் உலகம் அறிந்தவரை ஈழத்தில் தம்பி தமிழ் அரங்கம் என்று ஒன்றும் ஒருபோதும் இருந்தது இல்லை. அது தமிழுக்கு ஏதும் தொண்டு செய்த சரித்திரமோ இருந்ததில்லை.

தமிழ் பால் பற்றுக் கொண்ட எழுத்தாளர்களும் கவிஞர்களும் ஏன் விழுந்தடித்துக் கொண்டு மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடுகிறார்கள் என்பது பெரிய ஆச்சரியமாக இருக்கின்றது. இளவாலை அமுது தனது படைப்பை வெளியிடுவதற்கு இந்திரகுமாரை நாடி இருக்கக்கூடாது. இந்திரகுமாரின் அவியல் நோய் தற்போது இலண்டனில் Sars நோயைப் போல் சிலரைத் தொற்றிக் கொண்டுள்ளது. இதன் கடைசி நோயாளி (Last Victim) கஸ்பார் அடிகளார் போல் தோன்றுகின்றது என உதயனுக்கு கிங்ஸ்பரியிலிருந்து வேந்தன் தெரிவிக்கின்றார்.

# சூடு பிடிக்கும் சுயநிர்ணய உரிமை

இலங்கை இனப்பிரச்சினை பேச்சு வார்த்தைகள் மூலம் மட்டுமே தீர்க்கப்பட வேண்டும் என்ற நிலை ஏற்பட்டு உள்ள சூழலில் அது பற்றிய வாதப் பிரதிவாதங்கள் தலை தூக்கி உள்ளன. எந்த அடிப்படையில் பேச்சு வார்த்தை மேற்கொள்ளப்படப் போகிறது என்பது உன்னிப்பாக அவதானிக்கப்பட்டு வருகிறது. சமஸ்டி, சுயநிர்ணய உரிமை (உள்ளக, வெளியக சுயநிர்ணய உரிமை) என்பன தற்போது இலங்கைத் தமிழர் அரசியல் வட்டாரங்களில் மிகவும் அதிகமாகப் பயன்படுத்தப்படும் பதங்களாக அமைந்து உள்ளது.

இச்சூழலில் தென்னிலங்கை அரசியலில் நீண்டகாலம் ஈடுபட்டு கடந்த ஆண்டு பிரித்தானியாவில் அரசியல் தஞ்சம் கோரிய பி எ காதரின் சுயம் நிர்ணயம் உரிமை என்ற நூல் ஏப்ரல் 6ம் திகதி அப்பால் தமிழ் இணையச் சஞ்சிகையினால் வெளியிடப்பட்டது. குடும்ப விழாவாக இடம்பெற்ற இவ்வெளியீட்டு விழாவில் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டு இருந்த பல்வேறு அமைப்புகளைச் சேர்ந்தவர்களும் கலந்து கொண்டனர். இதனை நூல் ஆய்வை மேற்கொண்ட ஐபிசி தமிழ் நிகழ்ச்சித் தயாரிப்பாளர் யமுனா ராஜேந்திரனும் சுட்டிக்காட்டினார்.

ரி சோதிலிங்கம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் முதலில் கலாநிதி மு நித்தியானந்தன் நூலை ஆய்வு செய்தார். சத்தியம் சிவம் சுந்தரம் என்பது போல் சுயம் நிர்ணயம் உரிமை அமைந்துள்ளது எனக் குறிப்பிட்ட அவர் சுயம் நிர்ணயம் என்பது ஒரே அர்த்தம் கொண்ட பதங்கள் என்றும் அவை அவ்வாறு குறிப்பிட்டு இருக்க வேண்டியதில்லை என்றும் தெரிவித்தார். காலத்தின் தேவை கருதி வெளியிடப்பட்ட இந்நூல் மேலும் சிறப்பாக்கப்பட்டு இருக்கும் என்ற வகையில் நித்தியானந்தன் தனது ஆய்வை கொண்டு சென்றார்.

80 பக்கங்கள் கொண்ட நூலில் 38 பக்கங்களே சொல்ல வந்த விடயத்திற்கு ஒதுக்கப்பட்டதும், 80 நூல்களைப் பயன்படுத்தி இந்நூலை இரண்டே நாட்களில் எழுதி முடித்ததாக காதர் தெரிவித்ததும் சமகாலப் பிரச்சினைகள் ஆராயப்படாததும் நூலின் கனதியை குறைப்பதாக அங்கு வெளிப்படுத்தப்பட்டது.

அடுத்து நூலை ஆய்வு செய்த ரமுனா ராஜேந்திரன் சர்வதேசச் சூழல் மாற்றமடைந்து போராட்டமும் பயங்கரவாதமும் ஒன்றாகப் பார்க்கப்படும் சூழலில் இந்த நூல் அப்பிரச்சினையை சரியாக ஆய்வு செய்ய வில்லை எனக் குறிப்பிட்டார். தேசிய விடுதலைப் போராட்டங்கள் இதே வழியில் இனிச் செல்ல முடியாது எனக் குறிப்பிட்ட ராஜேந்திரன் அமெரிக்கா உட்பட்ட மேற்கு நாடுகளில் மனித உரிமைகள் பற்றிய கருத்தாக்கங்களின் தளம் மாறுபட்டு உள்ளது எனக் குறிப்பிட்டார். அவர் மேலும் குறிப்பிடுகையில் ஈராக் யுத்தம் போன்ற விடயங்களில் ஐக்கிய நாடுகள் சபையின் கையாலாகாத நிலையைச் சுட்டிக் காட்டியதுடன் ஐ நா வரையறைக்குள் தேசிய இனப்பிரச்சினையை பார்க்க முடியாது என்ற வகையிலும் தனது ஆய்வை மேற்கொண்டிருந்தார்.

தனது பதிலுரையில் இலங்கைத் தமிழ் மக்களின் போராட்டம் பற்றி சரியான நூல்கள் வெளிவரவில்லை எனக் குறிப்பிட்ட பி ஏ காதர் எமது சமூகத்தில் சமூக ஆய்வாளர்கள் இல்லை என்றும் ஆய்வாளர்களுக்கு வறுமை நிலவுவதாகவும் குற்றம்சாட்டினார். அவர் தொடர்கையில் இலக்கிய விமர்சகர்களே அரசியல் விமர்சனங்களை மேற்கொள்ளும் வறுமை காணப்படுவதாகவும் ஆய்வை மேற்கொண்ட மு நித்தியானந்தனும் யமுனா ராஜேந்திரனும் நூலை திருப்பி படித்து அதனை விளங்கிக் கொள்ள வேண்டும் எனத் தெரிவித்தார். மேலும் அவர் தனது பதிலுரையில் எச் எம் பெர்னான்டோவோடு தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் அமிர்தலிங்கத்தை ஒப்பிடுவது எச் எம் பெர்னான்டோவை கொச்சைப்படுத்துவதாக அமையும் எனக் குறிப்பிட்டார்.

தனது நூல் சுயநிர்ணய உரிமை பற்றிய சரியான விளக்கத்தை ஏற்படுத்தவே எழுதப்பட்டது என்றும் ஆய்வாளர்கள் குறிப்பிட்ட விடயங்களையும் எழுத முனைந்திருந்தால் தனது நோக்கம் நிறைவேற்றப்பட்டிருக்காது என ஆசிரியர் காதர் தனது நிலையைத் தெளிவுபடுத்தினார். நூல் வெளியிடப்பட்ட காலகட்டமும் நூலின் தேவையும் அனைவராலும் வரவேற்கப்பட்டது. வெளியீட்டாளர் கி பி அரவிந்தன் அதனை வெளிப்படுத்தினார். அவர் தனது வெளியீட்டாளர் உரையில் அதனை வெளியிடுவதில் ஏற்பட்ட சிக்கல்களை வெளிப்படுத்தினார்.

வைபவத்தின் முடிவில் சிற்றுண்டிகள் பரிமாறப்பட்டது. ஒரு அரசியல் விவாதத்தை மேலும் செழுமைப்படுத்தும் வகையில் நிகழ்ச்சி முடிவடைந்தது.




# சுற்றுலா சென்றவர் விபத்தில்

இலண்டன் ரெட்பிரிச் பகுதியில் வியாபரம் நடத்தி வந்த இளைஞர் தமிழகத்தில் சுற்றுலா சென்ற போது விபத்தில் சிக்கி மரணமடைந்தார். ரெட்பிரிஜ் சுப்பர் பூட் உரிமையாளரே தமிழகத்திற்கு சுற்றுலா சென்றிருந்த போது விபத்தில் சிக்கி மரணமடைந்தார். சுரேஸ் என்றழைக்கப்படும் வின்சன்ற ஜோர்ஜ் (31) என்ற இந்த இளைஞரும் அவருது குழுவும் சென்ற கார் லொறியுடன் மோதியதில் இவ்விபத்து நிகழ்ந்தது. ஏப்ரல் 11ம் திகதி இடம்பெற்ற இவ்விபத்தில் அக்குழுவில் சென்ற ஏனையவர்களும் பலத்த காயங்களுக்கு உள்ளாகி உள்ளனர்.

எல்லோருடனும் நேசம் பாராட்டும் சுரேஸின் பிரிவு சுரேஸை அறிந்த எம்மவரை மட்டுமல்ல அவரைத் தெரிந்திருந்த ஏனைய சமூகத்தவர்களையும் அதிர்ச்சிக்கு உள்ளாக்கி உள்ளதாக குறிப்பிட்டு அவருக்காக வோல்தம்ஸ்றோ நண்பர்கள் கண்ணீர் அஞ்சலி விட்டுள்ளனர். கடந்த ஆண்டு நவம்பர் மாதம் திருநாவுக்கரசு மணிவண்ணன் (37), சிவசுப்பிரமணியம் சுதர்சன் (43) ஆகிய இருவரும் பிறிஸ்டலில் அவர்கள் பயணம் செய்த ஜீப் தடையில் மோதி தடம்புரண்டதில் ஏற்பட்ட விபத்தில் மரணமடைந்தது குறிப்பிடத்தக்கது.

# விளம்பரங்களுக்கூடாக செய்தி

இலண்டனில் மோசடியான நிர்வாகம் கொண்ட தமிழர் அமைப்பு என அடையாளம் காணப்பட்ட TR-TEC அமைப்பு விளம்பரங்களுக்கூடாக தங்கள் மீதுள்ள மோசடிகளை மறைக்க முயல்கின்றது. பல்லாயிரம் பவுண்கள் உதவிகளைப் பெறும் இந்நிறுவனத்தின் சீரற்ற மோசடியான நிர்வாகம் மாற்றி அமைக்கப்படாமல் விளம்பரத்தின் மூலம் பெருமளவு பணத்தைக் கொடுத்து செய்திகளை வெளியிட வைக்கின்றன. இவ்வாறு வெளிவந்த ஒரு செய்தி தொடர்பாக அச்செய்தியை வெளியிட்ட பத்திரிகை ஆசிரியரை ரூற்றிங்கைச் சேர்ந்த சதீஸ் என்ற வாசகர் தொடர்பு கொண்டு பேசிய போது வாசகர் கேட்ட கேள்விக்குப் பதிலளித்த அந்த ஆசிரியர் □விளம்பரத்தைத் தந்து இந்தச் செய்தியையும் போட்டுவிடுங்கோ என்று கேட்கிறார்கள். மறுக்க முடியவில்லை. இருந்தாலும் அது யாரையும் தாக்காமல் யாருக்கும் பதில் சொல்வதாக அமையாமல் அதனை வெளியிட்டோம்' என்று தெரிவித்து உள்ளார்.

இதே பத்திரிகை இதற்கு முன்னர் வெளியிட்ட விளம்பரத்துடன் வந்த OFAAL (Oriental Fine Arts Academy of London) பற்றிய செய்தியில் சம்பந்தப்பட்ட இரு தரப்பினரையும் பத்திரிகை ஆசிரியர் தொடர்பு கொள்ளாமல் விளம்பரம் கொடுத்தவருடைய செய்தியை வெளிட்டிருந்தார். இப்படியான செயல்கள் தமிழ் ஊடகங்களை பலவீனப்படுத்துவதாகவே அமையும் என அப்பத்திரிகையாளருடன் பேசிய சதீஸ் உதயனுக்குத் தெரிவித்தார்.

நிர்வாக மோசடிகளில் ஈடுபட்டு உள்ள TR-TEC, TCHA ஆகிய அமைப்புகள் பல்லாயிரம் பவுண்களை வருமானமாகக் கொண்டுள்ளன. இவ்வமைப்புகள் பணத்தைக் காட்டி ஒரு ஊடகத்தை வாங்குவதோ அல்லது ஒரு பத்திரிகையை வெளியிடுவதோ சர்வசாதாரணமான விடயங்கள். மக்கள் இப்படியான ஊடகங்கள் தொடர்பாக விழிப்பாக இருக்க வேண்டும். ஊடகங்களை நடத்த விளம்பரங்கள் இன்றியமையாதவையாக இருந்தாலும் விளம்பரத்தையும் செய்தியையும் குழப்பிக் கொள்ளக் கூடாது. மேலும் சமூக விரோத சக்திகள் விரிக்கின்ற வலையில் விழுந்து விடாமல் தங்களைப் பாதுகாக்க வேண்டும். அப்படிச் செய்யாவிட்டால் மோசடிகளையும் களவுகளையும் மறைக்கவும் நியாயப்படுத்தவும் சமூக விரோத சக்திகளால் ஆரம்பிக்கப்பட்ட விடுதலை போன்ற மொட்டைப் பத்திரிகையின் நிலைக்கு ஊடகங்கள் தாழ்ந்து போகும். எதிர்காலத்தில் கள்ளன் காடையன் எல்லாம் பேப்பர் அடிக்கலாம் என்ற நிலை உருவாகிவிடும். ஊடகங்கள் பொறுப்புடன் செயற்பட்டு மக்களுக்கு நேர்மையாக நடந்து கொள்ள வேண்டும்.

# தமிழக சிறப்பு முகாம்கள்

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் சம்பந்தப்பட்டவர்கள் என்று குற்றம் சாட்டப்பட்டு தமிழகத்தில் உள்ள சிறப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அப்பாவி இளைஞர் யுவதிகளை விடுதலை செய்யுமாறு அகதிகள் புனர்வாழ்வு மற்றும் மனித உரிமைகள் இயக்கம் கேட்டு உள்ளது. இம்முகாம்களில் 300 வரையான அரசியற் கைதிகள் கடந்த பல ஆண்டுகளாக விசாரணைகள் இன்றி தடுத்து வைக்கப்பட்டு இருப்பதாக இவ்வமைப்பின் இலண்டன் பொறுப்பாளர் சி பாலச்சந்திரன் தெரிவிக்கிறார். இவர்கள் தமிழக அரசியல் தரப்பிலும் இலங்கை அரசியல் தரப்பிலும் மறக்கப்பட்டவர்களாக இருப்பதாக பாலச்சந்திரன் குற்றம்சாட்டினார்.

இலங்கையில் சமாதான சூழல் ஒன்று ஏற்பட்டு இருக்கும் இன்றைய நிலையில் பல ஆண்டுகள் தமது எதிகாலத்தைத் தெரியாமல் வாழும் இவர்களுக்கு ஒரு விடிவு ஏற்பட வேண்டும் என்று அவர் தனது வேண்டுகோளில் கேட்டுக் கொண்டு உள்ளார். இவ் அரசியற் கைதிகள் விடயத்தில் உதவ விரும்புபவர்கள் அல்லது மேலதிக தகவல்களைப் பெற விரும்புபவர்கள் சி பாலச்சந்திரனுடன் 077 5346 5573 என்ற இலக்கத்தில் தொடர்பு கொள்ள முடியும்.

For News & Advertising: 020 8952 5677 For Distributions : 020 8905 7775

# ஜெயதேவன் நீதிமன்றத்தை துஸ்பிரயோகம் செய்ததற்குக் கண்டனம்

## பழிவாங்கல் முயற்சி தோல்வி

திரு திருமதி துரைராஜாவிற்கு எதிராக தமிழர் சமூக வீட்டு வசதிக் கழகம் Tamil Community Housing Association - TCHA சார்பில் அதன் இயக்குநர் ஆர் ஜெயதேவன் தொடுத்த வழக்கு கைவிடப்பட்டது. நீதிமன்றச் செயற்பாடுகளைத் துஸ்பிரயோகம் செய்வதாக நீதிமன்றம் கருதியதை அடுத்தே இந்த வழக்கு கைவிடப்பட்டு உள்ளது. தமிழ் சமூக வீட்டு வசதிக் கழகத்தின் வாடகையாளர் அமைப்பிற்கு தேர்தல் வைக்க வேண்டும் என்று கெ துரைராஜா அழுத்தம் கொடுத்ததை அடுத்தே அவரைப் பழிவாங்குவதற்காக இவ்வழக்குத் தொடரப்பட்டதாக பெயர் குறிப்பிட விரும்பாத அவ்வமைப்பின் அலுவலர் ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

ஒன்பது ஆண்டுகளுக்கு முன்னர் துரைராஜா வீட்டு நலக் கொடுப்பனவில் இருந்த காலத்தில் யூன் 9 1994ல் உள்ளாட்சி மன்றத்தின் வீடமைப்புப் பிரிவு அவருக்காக TCHAக்கு வழங்கிய கொடுப்பனவை நிறுத்தியது. அது தொடர்பாக TCHA, 15 மாதங்களின் பின்னர் துரைராஜாவுடன் தொடர்பு கொண்ட போது அது காலம் கடந்ததாகி இருந்தது. அப்போது இருந்த முகாமைத்துவமும் அதற்குப் பின் வந்த முகாமைத்துவமும் இந்த வாடகை நிலுவை தொடர்பாக எந்தச் சட்ட நடவடிக்கையையும் கடந்த 9 ஆண்டுகளாக எடுக்கவில்லை.

TCHAன் இயக்குனராக 2000ல் ஜெயதேவன் பதவி ஏற்றார். அதன் பின்னர் நடந்த இரண்டு வழக்குகளில் TCHAன் நிர்வாகத்தின் ஊழல்கள் வெளிப்படுத்தப்பட்டது. அவ்வீடமைப்பு நிறுவனத்தில் இருந்த சில வீடுகள் மோசமான நிலையில் இருந்தது. அவற்றைத் திருத்தும்படி கேட்கப்பட்ட போதும் அது பற்றி நிர்வாகம் கவனத்தில் எடுக்காமல் பொதுப் பணத்தை விரயம் செய்து வந்தமை நீதிமன்றத்தில் உறுதியானது. மேலும் TCHAன் வாடகை இருப்பாளர்கள் அமைப்பின் தற்போதைய நிர்வாகம் ஜெயதேவனின் பினாமி நிர்வாகம் என்றும் அந்நிர்வாகம் வாடகை இருப்பாளர்களின் குறைகளைத் தீர்ப்பதில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. இந்நிலையில் வாடகை இருப்பாளர்கள் சங்கத்தில் பொறுப்புகளை ஏற்று இவற்றை நிவர்த்தி செய்வதற்காக அவ்வமைப்பிற்கு தேர்தல் மூலம் நிர்வாகம் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என கெ துரைராஜா TCHAன் நிர்வாகத்தை வற்புறுத்தி உள்ளார். அதனை அடுத்தே ஒன்பது ஆண்டுகள் தூசிபடிந்த கோவையை ஜெயதேவன் பழிவாங்குவதற்காக தூசி தட்டி எடுத்து உள்ளதாக அவ் அலுவலர் உதயனுக்குத் தெரிவித்தார். மேலும் துரைராஜா தற்போது ஜெயதேவனுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுத்துவரும் டொக்டர் சபாரட்ணத்தின் நெருங்கிய நண்பர் என்பதும் துரைராஜாவின் கோவை கிளறப்படுவதற்குக் காரணமாக இருந்து உள்ளது.

TCHA ஆல கொடுக்கப்பட்ட முறைப்பாடு கடந்த ஆண்டு டிசம்பர் 2ம் திகதி பார்னற் கவுன்ரி கோர்டால் பெற்றுக் கொள்ளப்பட்டது. பெப்ரவரி 7 2003ல் காலை 10:00க்கு மாவட்ட நீதிபதி ஸ்ரீபன்சன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட இருந்தது. அப்போது TCHAன் முறைப்பாடு நீதித்துறைச் செயற்பாடுகைகளை துஸ்பிரயோகம் செய்வதாக கணிக்கப்பட்டலாம் என்பது ஜனவரி 27ல் வழங்கப்பட்ட நீதிமன்ற உத்தரவில் தெரிவிக்கப்பட்டது. பெப்ரவரி 7ல் மாவட்ட நீதிபதி ஜெர்லிஸ் முன்னிலையில் இருதரப்பும் சந்தித்தனர். இவ்வழக்கு மார்ச் 12க்கு ஒத்திவைக்கப்பட்டது. மார்ச் 12ல் இவ்வழக்கை கைவிடக் கோரும் உத்தரவை நீதிபதி ஜெர்லிஸ் வழங்கினார்.

# கோமாவில் இருந்த 3 குழந்தைகளின் தந்தை மரணம்

கோமா நிலையில் நீண்டகாலமாக இருந்த மூன்று குழந்தைகளின் தந்தை மார்ச் மாதம் பாரிஸில் காலமானார். நான்கு ஆண்டுகளுக்கு முன் லூட்ஸ் மாதா தேவாலயத்திற்கு சென்று கொண்டிருந்த போது ஏற்பட்ட விபத்தில் சுயநினைவை இழந்து கோமா நிலையை அடைந்த இவர் கடந்த மாதம் முழுமையான மரணத்தைத் தழுவினார். லூட்ஸ் மாதா ஆலயத்திற்கு உறவினர் நண்பர்களுடன் சென்று கொண்டிருந்த போது வண்டி கட்டுப்பாட்டை இழந்து பள்ளத்தில் விழுந்து அந்த விபத்து சம்பவித்தது. வண்டியில் பின்னிருக்கையில் தூங்கிக் கொண்டிருந்த அவர் விபத்தில் தூக்கி எறியப்பட்ட போதும் தூங்கியவாறு சுயநினைவற்று இருந்தார். ஓட்டுநர் உட்பட ஏனையவர்கள் சிறுகாயங்களுடன் தப்ப இத்தந்தை மட்டும் மீளாத்தூக்கத்திற்குச் சென்றார்.

கடந்த நான்கு ஆண்டுகளாக தனது கணவர் என்றோ ஓர் நாள் நினைவு திரும்பி வருவார் என்ற நம்பிக்கையில் இருந்த இளம் மனைவிக்கு கணவனின் மரணம் அதிர்ச்சியாக இருந்தது. அவரது மரணத்தை அடுத்து தற்கொலை முயற்சியில் ஈடுபட்ட மனைவியை உறவினர்கள் உடன் காப்பாற்றினர். இறந்தவர் தனது நாற்பதுக்களில் உள்ளவர் ஆவர். இவர் வட்டுக் கோட்டை, வட்டு இந்துக் கல்லூரிப் பழைய மாணவர் எனவும் அறியப்படுகிறது.

லூட்ஸ் மாதா ஆலயத்திற்கு செல்லும் வழியில் பலர் விபத்துக்கு உள்ளாவதாகக் குறிப்பிட்ட பெக்ஸிலி கீத்தில் வாழும் இறந்தவரின் தூரத்து உறவினரான இரவீந்திரகுமார், மிகுந்த மலைப் பாங்கான வீதியைக் கொண்ட இப்பயணத்தை அவசர அவசராமாக மேற்கொள்ள முயற்சிப்பதாலேயே இவ்வாறான விபத்துக்கள் ஏற்படுவதாகக் குறிப்பிட்டார்.

## தமிழ் ஓலைகள் 2003

தமிழ் ஓலைகள் 2003 புதுவருட தினத்தன்று வெளியிடப்பட்டு உள்ளது. 600க்கும் மேற்பட்ட பக்கங்களுடன் 10வது ஆண்டுத் தகவல் ஏடாக இது வெளிவந்து உள்ளது. பிரித்தானியாவில் உள்ள பெரும்பாலும் அனைத்து அமைப்புகளின் முகவரி, தொலைபேசி இலக்கங்கள் மற்றும் பல்வேறு விபரங்களுடனும் பலவர்ணத்தில் இவ்வேடு வெளிவந்து உள்ளது. முதன் முதலில் தமிழில் வெளிவந்த தகவல் ஏடு என்ற பெருமையைப் பெற்ற இவ்வேடு தனது 10வது வயதில் காலடி எடுத்து வைத்த உள்ளது. பிரித்தானிய தமிழர் தகவல் ஏடான இவ்விதழ் வழமை போல் ஐரோப்பிய மற்றும் ஸ்கண்டிநேவிய நாடுகளின் தகவல்களையும் தாங்கி வந்துள்ளது.

# நாவன்மைப் போட்டி முடிவுகள்

இலண்டன் தமிழ் நிலையம் நடாத்தும் தமிழ்ப் பாடசாலைகளுக்கிடையேயான நாவன்மைப் போட்டி வெம்பிளி ஹை ஸ்கூலில் மார்ச் மாதம் 30 திகதி காலை 10 மணிக்கு இடம்பெற்றது. 3 வயது தொடக்கம் 18 வயது வரையான மாணவர்களை வயது அடிப்படையில் 5 பிரிவாகப் பிரித்து அவரவர் வயது எல்லைக்கு ஏற்ப தலைப்புகள் வழங்கப்பட்டு பேச்சுப் போட்டி நடத்தப்பட்டது. அப்பேச்சுப் போட்டியில் நான் யார், தாய்மொழி, நான் விரும்பும் பெரியார், புலம் பெயர் வாழ்வும் பிறந்த பொன்னாடும், போரும் சமாதானமும், தாய் மொழியின் முக்கியத்துவம், புலம்பெயர் இலக்கியம் என பல்வேறு தலைப்புகள் கொடுக்கப்பட்டது.

இப்போட்டியின் முடிவுகள் வருமாறு:

| வயது | முதல் இடம் | இரண்டாம் இடம் |
|---|---|---|
| 03 - 05 : | கரிநி தேவராஜ் | நரேன் எல்லாளன் |
| 05 - 08 : | லாவன்யா லோகநாதன் | ஜோதிகா மொகமட் |
| 08 - 11 : | சோபிகா மொகமட் | பிரகலை மாணிக்கவாசகர் |
| 11 - 14 : | சின்துசா பாலேந்திரன் | சிறிலக்ஸ்மன் சிறிகாந்தலிங்கம் |
| 14 - 18 : | சுதேசன் மகேந்திரன் | |

மூன்றாம் இடம்
வி சுந்தரேஸ்வரன்
ஜெயந்தி சுந்தரேஸ்வரன்
மதுரமீனா திரவியராஜா
கபினுஜா சிறிதவராஜா

# அமெரிக்க இராணுவம் கொள்ளையில் ஈடுபட்டது

ஈராக்கில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்திருந்த நிலையில் அங்கிருந்த பெறுமதியான பொருட்களை களவாடுவதில் அமெரிக்க இராணுவமும் ஈடுபட்டதாக அமெரிக்க அரசு தெரிவித்து உள்ளது. ஈராக்கின் அரச மாளிகையிலும் ஏனைய முக்கிய இடங்களிலும் இக்கொள்ளை இடம்பெற்று உள்ளது. பணம், ஓவியம், மற்றும் பெறுமதியான பொருட்கள் கொள்ளையிடப்பட்டு உள்ளது. ரிகிரி பகுதியில் மட்டும் 400 மில்லியன்

### அமெரிக்க இராணுவம்...

பவுண் பெறுமதியான ஈராக் வங்கி நோட்டுகள் கொள்ளையிடப்பட்டது தொடர்பாக விசாரணைகள் நடைபெற்று வருகிறது.

MANAKTALA &CO.
Chartered Accounts
* Tax / VAT Return
* Accounts / Auditing
* Any needs for Accounts Purpose
Call Me
MR. PRADEEP MANAKTALA F.C.A., M.Sc.
on
Tel: 020 8579 7333
Fax: 020 8566 2028
Barclays Bank Chambers,
17 Leeland Mansions,
Leeland Road, West Ealing,
London W13 9HE

JK SHAH
Chartered Certified Accountants
& Registered Auditors
e-mail: jk@jkshah.com
website: www.jkshah.com
570 Romford Road, Manor Park
London E12 5AF
TEL: 020 8553 2436
FAX: 020 8514 6939

K.M.S. Accountants
For FREE Consultation on
Self Assessment Returns,
CIS25 refunds,
Financial Accounts for
Limited Companies/
Sole Traders, Company Formation,
VAT, PAYE &
Book-keeping Services
Tel: 020 8503 3375
Email: kms_group@hotmail.com

BHANOT & CO.
Chartered Accountants
A COMPLETE RANGE OF SERVICES AT REASONABLE RATES
TAX
AUDIT
FINANCE
PENSIONS
MORTGAGES
BOOK-KEEPING
CASH-FLOWS
ACCOUNTS
PAYROLL
PLANS
VAT
020 8840 8844
Email: anil@bhanot.co.uk

A PROFESSIONAL SERVICE FOR YOUR BUSINESS
SHAH P.J. & CO
Certified Accountant & Registered Auditor
Covering London & The Home Counties
1st Class Service at Reasonable Rates
* SOLE TRADERS
* PARTNERSHIPS
* LIMITED COMPANIES
* ACCOUNTS/VAT
* SELF ASSESSMENT
* TAX PLANNING
* BOOK-KEEPING BUREAU
* PAYROLL BUREAU
* SUB-CONTRACTORS
ACCA
Registered as Auditor by the Association of Chartered Certified Accountants
020 8907 1636 Fax 020 8907 9555
SHAH P.J. & COMPANY LIMITED 301 Kenton Lane, Harrow, Middx. HA3 8RR

MORTGAGE PLUS (London) LTD
Mortgages Tailor-made for You
* Specialist in CCJ/Default Cases
Tel:
020 8571 2570
07710 150713
81, South Road, Southall, Middx.
Your home is at risk if you fail to keep up repayments on loans secured on it.

# மே 10 பிரித்தானிய சைவர்களின் கரிநாள்

மே மாதம் 10ம் திகதி பிரித்தானிய சைவ மக்களின் கரிநாளாக அமைந்து உள்ளது. கடந்த ஆண்டு மே மாதம் 10ம் திகதி ஈழபதீஸ்வரர் ஆலயம் சமூக விரோதிகளின் கைக்கு மாறியதுடன் அந்தக் களவாடல் முயற்சியில் அர்ச்சகர் குகன் சமூக விரோதிகளின் தூண்டுதலினால் சிவலிங்கத்தைத் துடைப்பத்தால் அடித்தார். அதிர்ச்சி அடைந்த சைவ அடியார்கள் ஆத்திரமடைந்து அர்ச்சகரைத் தாக்க முயன்றனர். அதனையும் பொருட்படுத்தாமல் ஒரு தெருச் சண்டியன் போல் குகன் தன் பூநூலை அறுத்தெறிய முற்பட்டார். இந்தக் கலம்பகத்தை ஏற்கனவே திட்டமிட்டு இருந்த சமூக விரோதக் கும்பல் அமைதியாக நடக்க வேண்டிய கூட்டத்தைக் குழப்பி 50க்கும் மேற்பட்ட பொலிஸாரை பூட்சுடன் ஆலயத்திற்குள் வரவழைத்தனர். இந்த விசமத்தனத்தால் ஆத்திரமடைந்த 200க்கும் மேற்பட்ட சைவ அடியார்கள் ஆலயத்தை கொள்ளையிட்ட ஜெயதேவனைச் சுற்றி வளைத்து தம் ஆத்திரத்தைத் திட்டித்தீர்த்தனர். அந்நிலையில் நடப்பவை எதனையும் அறிந்திராத காவல்துறையினர் சைவ அடியார்களிடம் மாட்டிய ஜெயதேவனையும் மைத்துனர் சௌந்தர்ராஜனையும் காரில் ஏற்றி தப்பியோடச் செய்தனர். (முழுச் செய்தியும் படங்களுடன் உதயன் இதழ் 22ல்)

ஆலயம் ஆரம்பம் :

1999ம் ஆண்டு (விடுதலைப் புலிகள் பிரித்தானியாவில் தடை செய்யப்படுவதற்கு முன்னர்) ஈழபதீஸ்வரர் ஆலயம் தாயகத்தில் உள்ள மக்களுக்கு உதவும் வகையில் விடுதலைப் புலிகளின் ஆசீர்வாதத்துடன் ஆரம்பிக்கப்பட்டது. அதில் மு சிவராஜா, கெ விவேகானந்தன், இ ஜெயதேவன் அவரது மைத்துனர் பி சௌந்தர்ராஜன் இன்னும் நால்வரும் சேர்ந்து ஆரம்பித்தனர். ஆரம்பத்தில் தாயக மக்களுக்கு பணம் அனுப்பப்பட்டது. ஆனால் ஜெயதேவனும் மைத்துனரும் ஆலயத்தை தம் குடும்பச் சொத்தாக மாற்ற திட்டமிட்டு இருந்தனர். அதில் மு சிவராஜாவைத் தவிர மற்றையவர்கள் பெரிதாக ஈடுபடாமல் ஒதுங்கி இருந்தனர். அதனால் சிவராஜாவை நிர்வாகத்தில் இருந்து தூக்க ஜெயதேவன் திட்டமிட்டார். ஆனால் ஜெயதேவனும் மைத்துனரும் 2000ம் ஆண்டுக்குப் பின் ஊருக்கு பணமும் அனுப்பாமல் கணக்கும் காட்டாமல் காய் வெட்டி வந்ததை சிவராஜாவும் அங்கிருந்த பக்தர்களும் கேட்டனர். பலனளிக்காததால் மக்கள் முன் ஜெயதேவனை வரும்படி கோரி மே பத்தாம் திகதி பொதுக் கூட்டத்தைக் கூட்டினர். அர்ச்சகர் குகனைக் கொண்டு சிவலிங்கத்துக்கு துடைப்பத்தால் அடித்து அக்கூட்டத்தை கலம்பகமாக்கி குழப்புவதில் ஜெயதேவன் வெற்றி கண்டார்.

புலிகளின் தடையும் ஆலயக் கொள்ளையும் :

பயங்கரவாதத் தடைச்சட்டம் கொண்டு வரப்பட்டு புலிகள் பிரித்தானியாவில் தடைசெய்யப்படும் சூழ்நிலை ஏற்பட்டதும் ஜெயதேவன் குழு ஆலயத்தினை குடும்பச் சொத்தாக்குவதில் தீவிரமாக இயங்கியது. கோயில் உண்டியல் ஜெயதேவன் வீட்டுக்கு கொண்டு செல்லப்பட்டது. ஊருக்கு அனுப்பப்படும் பணம் நிறுத்தப்பட்டது. புலிகள் தடை செய்யப்பட்டதும் ஜெயதேவன் ஆலயத்தை முழுமையாக குடும்பச் சொத்தாக்கினார். புலிகளின் முக்கிய அரசியல் பிரமுகருக்கு எதிராக ஆங்கிலத்திலும் தமிழிலும் மொட்டைக் கடிதம் எழுதி வெளியிட்டார். ஜெயதேவனின் அடாவடித்தனத்தைத் தட்டிக் கேட்ட புலி ஆதரவாளர்களை புதிய பயங்கரவாதத் தடைச்சட்டத்தை பயன்படுத்திக் காட்டிக் கொடுத்தார். இதனால் சில முக்கிய பிரமுகர்களின் வீடு முற்றுகையிடப்பட்டு சோதனையிடப்பட்டது. தனது வஞ்சம் தீர்க்க பொது மக்களின் பணத்தை விரயமாக்கி புலானாய்வுப் பிரிவுகளை நடவடிக்கைகள் எடுக்கத் தூண்டியது, சிலரின் வீட்டுத் தொலைபேசிகள் தற்போதும் ஒட்டுக் கேட்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

அடுத்த தலைவர் ?

இத்தனை மோசடியும் செய்து விட்டு பிரித்தானியாவில் புலிகளின் தடை நீக்கப்பட்டால் தான் தான் அடுத்த தலைவர் என ஜெயதேவனால் நாசுக்காகப் பிரச்சாரம் வேறு செய்யப்படுகிறது. போல் பாஸ்கரன் போன்ற நம்பிக் கெட்ட சிலரைப் பயன்படுத்தி தான் தான் பிரித்தானியாவின் அடுத்த தலைவர் என பிரச்சாரம் செய்யப்படுகிறது. எரிகிற வீட்டில் பிடுங்கியது இலாபம் என்ற வகையில் புலிகள் தடைசெய்யப்பட்டதும் ஈழபதீஸ்வரர் ஆலயத்திலும் TCHAஇலும் சுருட்டும் அளவுக்குச் சுருட்டிக் கொண்டு இப்போது பதவிக்கு வலை விரித்து உள்ளனர். ஜெயதேவனும் அவரது சகபாடி இந்திரகுமாரும் இணைந்து மொட்டைக் கடிதம் மற்றும் மொட்டைப் பிரசுரம் விட்டுவிட்டு தற்போது புலிகளின் தலைவர் பிரபாகரனையும் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தையும் முன்பக்கத்தில் போட்டு தன் கபடக் கூத்துக்களை மறைக்க விடுதலை என்ற பெயரில் மொட்டைப் பத்திரிகை ஒன்றை வெளியிடுகின்றனர். (ஆசிரியரும், கட்டுரையாளரும் இல்லாத பத்திரிகை) அதில் யாரும் விளம்பரம் செய்வதில்லை. சுருட்டிய பணத்தில் வெளியிடப்படும் இந்த இலவசப் பத்திரிகையில் ஜொனி வோக்கர் இந்திரகுமார் சுருட்டுவதை கண்டு கொள்ள வேண்டாம் என்று எழுதுகிறார். தற்போது நிர்வாக மற்றும் மோசடிகளில் ஈடுபட்டதாக நீதிமன்றத்தால் கணிக்கப்பட்ட TR-TECம் ஜெயதேவனுடன் இணைந்து தங்கள் மோசடிகளை மறைக்க 30 ஆண்டுகால விடுதலைப் போராட்டத்துக்குப் பின்னால் ஒலிந்து கொண்டு தியாகங்களை கேவலப்படுத்துகின்றனர்.

# சார்ஸ் நோய் அபாயம்

## புலம்பெயர்ந்த தமிழர்களும் பாதிக்கப்பட்டு இருக்கலாம்

உலகளவில் மக்களை பீதிக்கு உள்ளாக்கி இருக்கும் சார்ஸ் நோய் புலம்பெயர்ந்த தமிழர்களையும் தாக்கி இருக்கலாம் என அஞ்சப்படுகிறது. சார்ஸ் நோயினால் மிகவும் பாதிக்கப்பட்ட நகரங்களான கொங்கொங், பீஜிங், ரொறன்றோ ஆகிய இடங்களில் புலம்பெயர்ந்த தமிழர்கள் குறிப்பிடத்தக்க அளவில் காணப்படுவதாலேயே இவ் அச்சம் எழுந்துள்ளது. ரொறன்ரோவில் பல்லாயிரம் தமிழர்கள் வாழ்கின்றனர். மேற்கு நாடுகளுக்கு வருவதற்காகப் புறப்பட்டு பல நூறு தமிழர்கள், கொங்கொங் பீஜிங் நகரங்களில் நாடோடிகளாக வாழ்கின்றனர். இந்நோயினால் மிகவும் பாதிக்கப்பட்ட இடங்களில் தமிழ் மக்கள் வாழ்வதால் இந்நோய் தமிழர்கள் மத்தியிலும் பரவும் அபாயம் தென்படுகிறது. புலம்பெயர்ந்த தமிழர்கள் பொதுவாகவே நோய் அறிகுறிகள் மற்றும் மருத்துவ ஆலோசனைகள் பற்றி அக்கறை குறைந்தவர்களாக இருப்பதால் இந்நோய் தொற்றி இருந்தாலும் அதனை அறியாதவர்களாக அதனை பரப்புபவர்களாகிவிடுவார்கள் என இறுதி ஆண்டு மருத்துவ பீட மாணவர் நகுலேஸ்வரன் தெரிவிக்கிறார்.

இந்நோயினால் உலகின் பலபாகங்களைச் சேர்ந்த 3,800 பேர் பாதிக்கப்பட்டும் 222 பேர் மரணமடைந்தும் உள்ளனர். ஆனால் இந்நோய்யை தாம் கட்டுப்பாட்டுக்குள் வைத்திரக்க முடியும் என பிரித்தானிய சுகாதார அமைச்சு நம்பிக்கையுடன் தெரிவித்த உள்ளது. சிங்கப்பூர், வியட்நாம், தாய்வான் ஆகிய நாடுகளும் இந்நோயினால் மிகவும் பாதிப்படைந்த உள்ளன. இந்நோய் உலக பொருளாதாரத்திலும் மிகுந்த தாக்கத்தை ஏற்படுத்தி வருகிறது. செப்ரம்பர் 11, பயங்கரவாதம், பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தம் ஆகியன சர்வதேச விமானப் போக்குவரத்தை முடக்கிய பின் சார்ஸ் விமானப் போக்குவரத்தில் மேலும் பாதிப்பை ஏற்படுத்தி உள்ளது.

வெளிநாடு செல்ல கொங்கொங்கிலும் பீஜிங்கிலும் காத்திருக்கும் தமிழர்கள் சுகாதாரம் குன்றிய, சனநெருக்கமான இடங்களில் அல்லது விடுதிகளில் தங்க வைக்கப்படுவதால் அவர்கள் இந்நோய்க்கு ஆளாக நேரிடலாம் என்ற அச்சம் தெரிவிக்கப்படுகிறது. மேலும் கொங்கொங், பீஜிங் நகர்களில் இத்தமிழர்கள் மருத்துவ சேவையை பெற்றுக் கொள்வதிலும் நெருக்கடிக்கு உள்ளாகலாம் எனவும் தெரியவருகிறது.

பீஜிங்கில் உள்ள மக்கள் மருத்துவமனை ஏப்ரல் 24ம் திகதி தடைவிதிக்கப்பட்ட பகுதியாக்கப்பட்டு உள்ளது. சார்ஸ் நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் தனிமைப்படுத்தப்பட்டு சிகிச்சை அளிக்கப்படுகிறது. மக்கள் மருத்துவமனையில் குறைந்த பட்சம் 60 மருத்துவர்களும் தாதிகளும் இந்நோய்க்கு உள்ளாகி உள்ளனர். 25ம் திகதிய தகவலின் படி பீஜிங் நகரில் மட்டும் 779 பேர் நோய்வாய்ப்பட்டு உள்ளனர். 39 பேர் இறந்து உள்ளனர். மேலும் இந்நோய்க்கு சிகிச்சை அளிக்க 6 மருத்துவமனைகள் வடிவமைக்கப்பட்டு உள்ளது. அவை யாவுமே நோயாளிகால் நிரம்பி உள்ளது. பீஜிங் நகருக்கான பிரித்தானிய விமானச் சேவைகள் ஏப்ரல் 25 முதல் நிறுத்தப்பட்டு உள்ளது.

மேற்படி நகரங்களுக்கு உல்லாசப் பயணிகளைச் செல்ல வேண்டாம் என சர்வதேச சுகாதார அமைப்பு மக்களுக்கு எச்சரிக்கை விடுத்து உள்ளது. ஏப்ரல் 25 தகவலின் படி கனடாவில் குறிப்பாக ரொறன்ரோவில் 140 பேர் நோய்வாய்ப்பட்டு உள்ளனர். 16 பேர் இறந்து உள்ளனர்.

* * * *

## படம் பிடிக்கும் தொப்பி

பொலிஸார் கடமையில் ஈடுபடும் போது குற்றங்களை பதிவு செய்யும் வகையில் சிறிய வீடியோ கமரா பொருத்தப்பட்ட பொலிஸ் தொப்பிகள் பயன்பாட்டுக்கு வந்து உள்ளது. போஸ்ற்மோத் பகுதியில் இவ்வகைத் தொப்பி அணிந்த பொலிஸார் காவலில் ஈடுபட்டு உள்ளனர். கலவரம், மற்றும் குற்றச் செயல்கள் நடக்கும் போது அங்கு செல்லும் பொலிஸார் அச்சம்பவங்களை பதிவு செய்துவிடுகின்றனர். இதனால் குற்றவாளிகளைப் பிடிப்பது இலகுவாக்கப்பட்டு உள்ளது. இனக்கலவரங்களிலும், உதைபந்தாட்டக் கலகங்களிலும் ஈடுபடும் வன்முறையாளர்களைப் பிடிப்பதற்கும் குற்றத்தை புரிந்து விட்டுத் தப்பி ஓடுபவர்களையும் இவ்வீடியோகமராக்கள் படம் பிடித்தவிடும்.

## புதிய வைட்டமின்

1948ல் பி12 என்ற விற்றமின் கண்டு பிடிக்கப்பட்ட பின் தற்போது புதிய விற்றமின் ஒன்று கண்டு பிடிக்கப்பட்டு உள்ளது. PQQ - pyrroloquinoline quinone என்ற இந்த விற்றமின் மாரடைப்பு போன்ற இதய நோய்களுக்கும் புற்றுநோய், என்பு நோய்க்கும், சிறுகுடல் நோய்களுக்கும், உடற்பருமனுக்கும் உகந்தது என ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். ஜப்பானில் கண்டுபிடிக்கப்பட்டு உள்ள இந்த விற்றமின் மனிதர்களில் உள்ள கருவளக் குறைபாட்டையும் தீர்க்கும் என எலிகளில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளில் தெரியவந்து உள்ளது. கொதிக்க வைக்கப்பட்ட சோயாவில் இருந்து பெறப்படும் நட்டோ என்ற ஜப்பானிய குடிவகையில் காணப்படும் இச்சத்து பாப்பாப்பழம், கிவிப் பழம், பார்ஸ்லி, கிறீன் ரி, கறீன் பெப்பர் ஆகியவற்றிலும் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## மண்டேலாவின் சிலை

தன்னை கௌரவித்து தனது உருவச்சிலையை ரவலகர்ஸ்கயரில் வைக்கும் இலண்டன் மேயர் கென் லிவிங்ஸ்டனின் திட்டத்திற்கு நெல்சன் மண்டேலா தனது இதயம் கனிந்த நன்றியைத் தெரிவித்து உள்ளார். £400,0000 செலவில் அமைக்கப்பட இருக்கும் இவ்வுருவச் சிலை தென்னாபிரிக்காவின் 10 ஆண்டு ஜனநாயக ஆட்சியை குறிக்கும் வகையில் அடுத்த ஆண்டு திறந்து வைக்கப்பட இருக்கிறது.

## பொது மன்னிப்பு

சட்டவிரோதமாக துப்பாக்கிகளை வைத்திருப்பவர்கள் அதனை ஒப்படைக்கும்படி கேட்கப்பட்ட உள்ளனர். பொது மன்னிப்புத் திட்டத்தின்படி ஏப்ரல் மாதமும் சட்டவிரோத துப்பாக்கிகள் வைத்திருப்பவர்கள் அதனை ஒப்படைத்தால் பொது மன்னிப்பு வழங்கப்படுகிறது. நாங்கள் உங்கள் துப்பாக்கிகளையே கேட்கிறோம். பெயர்களை அல்ல. என்று பிரச்சாரப்படுத்தி வீதிகளில் நடமாடும் துப்பாக்கிகளின் எண்ணிக்கையை குறைக்க இப்பொது மன்னிப்புத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

## இலண்டன் ஒலிம்பிக்

2012ம் ஆண்டு ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளை இலண்டனில் நடத்துவதற்கான போட்டியில் பிரித்தானியா குதித்த உள்ளது. பரிஸ், மொஸ்கோ, நியூயோர்க், மட்றிக் ஆகிய நகரங்களும் இப்போட்டியில் இறங்கி உள்ளன. எங்கு ஒலிம்பிக் போட்டிகளை வைப்பது என்பது 2005 இலேயே தீர்மானிக்கப்படும். இலண்டன் தெரிவு செய்யப்படும் இடத்து கிழக்கு இலண்டன் ஸ்ரட்பேட் பகுதி ஒலிப்பிக்கின் முக்கிய பகுதியாக விளங்கும்.

## நீரிழிவுக்கு சிகிச்சை

டயபற்றீஸ் என்று ஆங்கிலத்தில் அழைக்கப்படும் நீரிழிவு நோய்க்கு பரம்பரை அலகு சிகிச்சை மூலம் தீர்வு கிடைக்கும் என ஆராச்சியாளர்கள் நம்பிக்கை தெரிவித்து உள்ளனர். எலிகளில் மேற்கொள்ளப்பட்ட பரம்பரை அலகுச் சிகிச்சை வெற்றி பெற்றதை அடுத்தே இந்த நம்பிக்கை வெளியிடப்பட்டு உள்ளது. மனிதர்களில் இப்படியான சிகிச்சையைச் செய்ய ஆண்டுகள் தேவைப்படலாம் ஆனாலும் இந்த ஆராய்ச்சி முடிவு குறிப்பிடத்தக்கது என விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.

For News & Advertising: 020 8952 5677 For Distributions : 020 8905 7775

# பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகம்

முன்னோர் வழிவந்த பாரம்பரியக் கலைகளை பாதுகாக்கும் முயற்சியில் ஈடுபட்டு உள்ள பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகம் தனது 10வது ஆண்டை இவ்வருடம் கொண்டாடுகிறது. 'எம்முன்னோர் வழிவந்த பாரம்பரியக் கலைகள், இனத்தின் அடையாளங்களைக் காட்டும் அரும்பெரும் சொத்து. கடந்த காலங்களில் போரின் அனர்த்தங்களினால் அவை அழிந்தொழிந்து வருவதுடன் கலைஞர்கள் பலரும் இறந்தும் வருகின்றனர்' என அதன் செயலாளர் கலாபூசணம் செ மெற்றாஸ்மெயில் தெரிவிக்கிறார். அவர் மேலும் தெரிவிக்கையில் அதன் எச்சசொச்சங்களை பாதுகாத்து ஆவணப்படுத்தும் முயற்சியில் தம் அமைப்பு ஈடுபட்டு இருப்பதாகவும் அதற்கான எட்டம்சத் திட்டத்தை நிறைவேற்ற 13 இலட்சம் ரூபாய் தேவைப்படுவதாகவும் குறிப்பிட்டார்.

இந்த எட்டு அம்சத் திட்டத்தில் இசை நாடகங்கள், நாட்டுக்கூத்துக்கள் போன்ற கிராமியக் கலைகளை ஒலி, ஒளிப் பேழையில் வெளியிடுதல், இவற்றுக்கான போட்டி வைத்து பரிசுகள் வழங்குதல், 50க்குக் குறையாத கிராமியக் கலைகளை வீதி ஊர்வலத்தில் பங்குபெறச் செய்தல், 10வது ஆண்டு நிறைவையொட்டி 3 நாட்கள் விழாச் செய்தல் ஆகியன இடம்பெற்று உள்ளன. கடல் கடந்து வாழ்ந்தாலும் நாட்டை, மொழியை, கலையை அழிய விடாது பாதுகாக்க புலம்பெயர்ந்த மக்கள் முன்வரவேண்டும் என்ற வேண்டுகோளும் விடுக்கப்பட்டு உள்ளது. (தொடர்பு : 12\1 மூத்தவிநாயகர் லேன், கச்சேரி-நல்லூர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.)

இவ்வமைப்பின் தலைவராக லயன் வைத்தியகலாநிதி வை தியாகராஜா உள்ளார். உப தலைவராக வே ஞானகாந்தன் உள்ளார். நிதிப்பொறுப்பாளராக யாழ் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த வ சி செல்வராசா உள்ளார்.

# அழியாக் கவிதை

ஏப்பிரல் வசந்த காலப் பகுதியில் 'அழியாத கவிதை' என்ற குறும் படம் ஒன்று இலண்டனில் தயாரிக்கப்பட்டு உள்ளது. ஐரோப்பிய திரைக் கலைப் படைப்பகம் வழங்கும் இப்படத்தை புலம்பெயர் சினிமாக் கலைஞர்களால் மிகவும் அறியப்பட்ட பரிஸ்டர் ஜோசப் தயாரித்து உள்ளார். சுவிஸ் நாட்டின் முன்னணி தமிழ் குறும்பட இயக்குநர் அஜீவன் இயக்கி உள்ள 'அழியாத கவிதை'யில் ஏ ரகுநாதன், சாஜகான், மோகன், தயா, அமலன், டேவிட் அஜிபோய், ஜோன் றஸ்லர் இன்னும் பலரும் நடித்து உள்ளனர். தா பாலகிருஷ்ணனின் மூலக்கதையை வைத்து எடுக்கப்பட்ட இப்படத்தின் திரைக் கதை, வசனம், ஒளிப்பதிவு ஆகியவற்றை அஜீவனே மேற்கொண்டு உள்ளார். தீபம் தொலைக் காட்சியின் ஒளிப்பதிவாளர் சுதாகர் இணை ஒளிப்பதிவை மேற்கொண்டு உள்ளார். அதில் கலையமைப்பில் முன்னணி ஓவியர் கெ கெ ராஜாவும் புகைப்படப் பிடிப்பை இலண்டனின் முன்னணி புகைப்படப் பிடிப்பாளர் சாந்தனும் மேற்கொண்டு உள்ளனர்.

ஆங்கில உபதலைப்புகளுடன் வெளிவர உள்ள இப்படம் இலண்டனில் குறும்படத் தயாரிப்பின் நம்பிக்கை நட்சத்திரமாக இருக்கும் என படப்பிடிப்பின் போது அருகில் இருந்த கலைப்பிரியன் உதயனுக்குத் தெரிவிக்கிறார்.

அண்மைக் காலமாக புலம்பெயர் சினிமா பற்றிய செய்திகளுக்கு மிகவும் முக்கியத்துவம் கொடுத்து ஆரோக்கியமான கலைப் படைப்புகளை உருவாக்குவதில் உதயன் ஈடுபட்டு வருவது அனைவரும் அறிந்ததே.

# திருமலையில் சுகாதார மாநாடு இலண்டனில் ஏற்பாடு

யூன் மாதம் 21 - 22 திகதிகளில் திருமலையில் இரண்டாவது சர்வதேச சுகாதார மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது. சுகாதார தேவைகளை வழங்கவும் அபிவிருத்தியை ஏற்படுத்தவும் இம்மாநாடு கூட்டப்பட்டு உள்ளது. இலண்டனில் உள்ள தமிழர் தகவல் நடுவமும் மனித உரிமைகளுக்கும் அபிலிருத்திக்குமான மையமும் இணைந்து இந்த மாநாட்டை ஏற்பாடு செய்துள்ளன. நடைமுறைச் சாத்தியமான நிர்வகிக்கக் கூடிய மக்களை மையப்படுத்திய சுகாதாரத் திட்டத்தை மக்களிடம் கொண்டு செல்வதும் முக்கயமானதும் நடைமுறையில் காணப்படும் விடயங்களுக்குத் தீர்வு காண்பதுமே இம்மாநாட்டின் முக்கிய நோக்கமாக அமைந்து உள்ளது.

அடிப்படைச் சுகாதாரப் பணியாளர்கள், சுகாதார நிபுணர்கள், பயிற்சியாளர்கள், நிதி வழங்கும் சர்வதேச அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள், ஆய்வாளர்கள், ஊடகங்கள், முடிவெடுப்பவர்கள் மற்றும் ஆர்வமுடைய அனைத்துத் தரப்பினரையும் இம்மாநாடு, ஒரே இடத்தில் சந்திக்க வைக்க உள்ளது. இதன் மூலம் தமது நோக்கத்தில் பாரிய வெற்றியை அடைய முடியும் என ஏற்பாட்டாளர்கள் நம்புகின்றனர்.

இந்த இருநாள் மாநாட்டில் சுகாதாரத் திட்ட அபிவிருத்தி, சுற்றுச் சூழல் - சுகாதார அபிவிருத்தி, சுகாதாரக் கல்வியும் பயிற்சியும், சமத்துவமும் நீதியும் ஆகிய விடயங்கள் பற்றி பயிற்சிப் பட்டறைகள், கருத்தரங்குகள் ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது. இம்மாநாட்டின் குறிக்கோள் நடைமுறைக்குச் சாத்தியமானது என ஏற்பாட்டாளர்கள் தெரிவிக்கின்றனர். இம்மாநாட்டுக்கு இலண்டனிலும் ஏனைய மேற்கு நாடுகளிலும் வாழும் தமிழ் மருத்துவ நிபுணர்கள் பலரும் செல்ல உள்ளனர்.

Thana & Dev
Solicitors & Administrators of Oaths
முன்னாள் THANA & CO தற்போது Thana & Dev சட்ட நிறுவனம் ஆக புதிய முகவரியில் இயங்குகின்றது.
* Immigration/Work Permit
* House/Shops Buy/Sale/Let
Call us
020 8521 4686
07976 660 635 (24 hrs)
10 Hoe Street, Walthamstow, London E17 4PH

நஷ்டஈடு கோர
Insurance Claims
NO WIN - NO FEE
களவு, நெருப்பு, வெள்ளம், நீர்ச்சேதம் இவைகள் மூலம் ஏற்பட்ட நஷ்டங்களை நிவர்த்தி செய்ய மேலதிக விவரங்களுக்கு நாடுங்கள்
Pearsons
0800 3898 102

SHAN & Co.
SOLICITORS
Experts in Work Permit Applications
Call us now on
189 Northolt Road, South Harrow
Middx. HA2 0LY
Tel: 020 8864 7070
Fax: 020 8864 6070

We are a specialist Criminal Firm
24 Hour
POLICE STATION EMERGENCY SERVICE
JUNG & CO
SOLICITORS
41 NORTH ROAD, SOUTHALL, MIDDX. UB1 2JL
TEL: 020 8813 8996 Fax: 020 8813 8559
EMERGENCY Nos. 07956 279 170
07956 867 370
We can also assist with:
Family - Wills & Probate - Conveyancing

DISCOUNT (CONSTRUCTION) DOUBLE GLAZING LTD.
FACTORY PRICES WHY PAY MORE?
MANUFACTURERS & INSTALLERS OF:
ALUMINIUM • HARDWOOD • RESIDENTIAL DOORS
PORCHES • PATIOS • UPVC
All Work Guaranteed For 10 Yrs
All Work Carried Out By Our Own Qualified Craftsmen
Retail & Trade Welcome All Double Glazing Repair Work Undertaken
Tel: 020 8514 0819 Fax: 020 8514 2333
Showroom: 844 Romford Rd, E12

FREE இலவசம்
The UDHAYAN
உதயன்
UK's No.1 National Tamil Newspaper
ADVERTISE FOR BEST RESULTS
020 8952 5677

UDHAYAN
for your cost effective ADVT.

Genga & Co.
Solicitors
Administor of Oaths
Legal Aid Francise for Crime and Immigration
Specialists in:
Asylum + Immigration Law
Criminal Law-
Police station
Magitrate court
Crown court
தேர்ச்சி பெற்ற சட்ட வல்லுனர்கள்:
“அகதி அந்தஸ்து குடிவரவு குடியகல்வு குற்றவியல் வழக்குகள்”
“மஜிஸ்டுரேட் நீதிமன்றம், பொலிஸ்நிலையம்”
எந்தவிதமான அவசரத் தேவைக்கும் 24 மணித்தியால தொடர்பு இலக்கம்
07956 569 559
Tel: 020 8795 5020
Fax: 020 8795 5030
Genga & Co.
1st & 2nd Floor
588 High Road Wembley,
Middx. HA0 2AF

WARAN & COMPANY
SOLICITORS
Commissioners of Oath
Community Legal Service
Specialists in:
* Immigration & Nationality
* Asylum & Refugee matters
* Housing
* Conveyancing (Residential & Commercial)
* Liquor Licencing
Call Mr. S. K. Nageswaran LLB
Mrs. P. Nageswaran LLB (Hons.), LLB (Lon)
on
Tel: 020 8808 2397
583 High Road, Tottenham, London N17 9SY Fax: 020 8801 8818

MARKANDAN & CO SOLICITORS
Solicitors & Administrators for Oaths
720 Romford Road, Manor Park London
Tel : 0208 514 8188 Fax : 0208 514 8303
Email: mm@markandan-solicitors.co.uk
We now specialise in Canadian Student Visas leading to better job prospects in North America and Canada.
Minimum Qualification: GCE A/L with 3 passes (Sri Lankan /UK)
The Course fees for the above courses are 50% cheaper than in the UK.
Failed Asylum seekers could apply and migrate to Canada.
For a free advice on the above, please contact Mr Das or Mr Kumar on 02085148188

தீராத உங்களின் மன வேதனைகள் தீர்ந்திட, உங்களின் வாழ்க்கையில் என்றும் வெற்றி கண்டிட தரிசியுங்கள் அன்னையை
020 8905 7775,
020 8952 7775

# இலண்டனில் யாழ் நூலக நினைவுகள்

இலண்டன் ஸ்ரட்பேர்ட் நூலகத்தில் யாழ் பொதுசன நூலகம் தொடர்பான நினைவு நாள் யூன் மாதம் முதலாம் திகதி ஒழுங்கு செய்யப்பட்டு உள்ளது. யாழ் நூலகம் 1981, யூன் 1ம் திகதி எரிக்கப்பட்டு 23 ஆண்டுகளுக்குப் பின்னர் மீண்டும் ஒரு நினைவு நாள் ஒழுங்கு செய்யப்பட்டு உள்ளது. இந்நிகழ்ச்சியில் யாழ் நூலகம் தொடர்பான விவரணப்படம் ஒன்று திரையிடப்படுவதுடன், நூலகம் தொடர்பான சில புகைப்படங்களும் காட்சிக்கு வைக்கப்பட இருக்கிறது.

2001ம் ஆண்டு முதல் ஒவ்வொரு யூன் முதலாம் திகதியும் நூலகம் தொடர்பான நினைவு நாள் ஒழுங்கு செய்யப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. 2001ல் நூலகம் எரிக்கப்பட்டு இரு தசாப்தங்களைக் குறிக்கும் வகையில் 'யாழ்ப்பாணப் பொது நூலகம் : ஒரு வரலாற்றுத் தொகுப்பு' எனும் ஆவணம் வோல்தம்ஸ்றோ வில்லியம் மொறிஸ் மண்டபத்தில் வெளியிட்டு வைக்கப்பட்டது. அதனை அடுத்து 2002 யூன் முதலாம் திகதி 1000 நூல்களின் தொகுப்பான நூல்தேட்டம் ஸ்ரட்பேர்ட் நூலக மண்டபத்தில் வெளியிடப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக இவ்வாண்டு யூன் முதலாம் திகதி ஸ்ரட்பேர்ட் நூலக மண்டபத்தில் யாழ்ப்பாண நூலகம் பற்றி வெளியான ஆங்கிலக் கட்டுரைகளின் தொகுப்பு இடம்பெற உள்ளது. அண்மைக்காலத்தில் யாழ் நூலகம் திறப்பதில் எழுந்த சர்ச்சைகள் உட்பட பல அண்மைக்காலக் கட்டுரைகள் இதில் இடம்பெற இருக்கிறது. மேலும் யாழ் நூலகத்தின் சர்வதேச இணைப்பாளர் நியமிக்கப்பட்ட பின்னர் இடம்பெறும் முதலாவது உத்தியோகபூர்வ சந்திப்பாக இது இடம்பெற இருக்கிறது.

இச்சந்திப்பில் அனைவரும் கலந்து கொண்டு எமது வரலாற்றில் அழியாத இடத்தைப் பெற்றிருக்கும் யாழ்ப்பாணப் பொதுசன நூலகம் தொடர்பான நினைவுகளை மீட்க வேண்டும் என இந்நிகழ்ச்சியை ஒழுங்கு செய்திருக்கும் யாழ்நூலக நண்பர்கள் வட்டத்தினர் தெரிவிக்கின்றனர். மேலதிக விபரங்களுக்கு த ஜெயபாலன் 020 8279 0354, செல்வராஜா 0158 270 3786)

# குடும்ப மருத்துவர் குடும்பத்தைப் பிரித்தார்

எசெக்ஸ் பகுதியில் மருத்துவப் பணியில் ஈடுபட்டு இருந்த தமிழ் மருத்துவர் ஒருவர் தன்னிடம் சிகிச்சைக்கு வந்த பெண்ணிடம் தகாத உறவை வளர்த்து உள்ளார். கோகுலத்து கிருஷ்ணனின் பெயரைக் கொண்ட 55 வயதுடையை இந்த மருத்துவர் 35 வயதுடைய மணமாககிக் குழந்தைககளை உடைய தமிழ்ப் பெண்ணுடன் உறவை வளர்த்து உள்ளார். திருமணமாகி தங்கள் துணைகளுடன் வாழ்ந்த காலத்திலேயே இந்தக் கள்ளக் காதல் ஏற்பட்டு உள்ளது.


இது பற்றித் தெரியவருவதாவது குடும்ப மருத்துவர்களின் விடுமுறை, சுகவீன விடுமுறைகளை நிரப்பும் மருத்துவராக இருந்த மேற்படி நபர் தன்னிடம் சிகிச்சைக்கு வந்த குடும்பப் பெண்ணுடன் கள்ளக் காதல் கொண்டு உள்ளார். இவர்கள் பரிசுகளை பரிமாறிக் கொண்டதுடன் தங்கள் துணைகள் வீட்டில் இருக்கும் போதே தொலைபேசியில் பேசிவந்துள்ளனர். மேற்கூறப்பபட்ட மருத்துவர் தனது சிகிச்சை நிலையத்தில் இருந்து 22 தடவைகள் அப்பெண்ணை அழைத்து உள்ளார். தனது அந்தரங்கக் காதலை நாட்குறிப்பில் பதிவு செய்து வந்த அப்பெண்ணின் போக்கில் அதிருப்தி அடைந்த கணவர் கண்ணில் நாட்குறிப்புச் சிக்கியதும் அக்குடும்பம் பிரிந்தது.

நம்பிக்கைக்கு பாத்திரமான தொழிலில் உள்ள அக்குடும்ப மருத்துவர் தனது தொழில் நியாயத்தையும் உணர்வையும் மனச்சாட்சியையும் கைவிட்டு இந்தத் தகாத உறவில் ஈடுபட்டமை அவரது துரோகத்தனம் என அக்குடும்பத்தின் நண்பர்கள் வட்டத்தினர் தெரிவிக்கின்றனர்.

# தமிழக இயக்குநர் அம்சன்குமார் இலண்டனில்



இயக்குநர் அஸ்வன்குமார்



எழுத்தாளர் முருகன்

தமிழகத்தின் முன்னணி விபரணப் பட இயக்குநர் அம்சன்குமார் இலண்டனுக்கு வந்து உள்ளார். இத்தாலியில் இடம்பெற்ற பயிற்சிப் பட்டறை ஒன்றிற்காக இத்தாலிக்கு வந்த அம்சன்குமார் ஐரோப்பிய நாடுகளில் உள்ள மாற்றுச் சினிமா ஆர்வலர்களால் இலண்டனுக்கும் பிரான்சுக்கும் அழைக்கப்பட்டு உள்ளார்.

கிழக்கு இலண்டன் வோல்தம்ஸ்றோவில் உள்ள வை எம் சி எ மண்டபத்தில் ஈழவர் திரைக் கலை மன்றத்தின் ஆதரவில் ஏப்ரல் 19ம் திகதி இவரது நான்கு விவரணப் படங்கள் திரையிடப்பட்டதுடன் கலந்துரையாடலும் இடம்பெற்றது. இரு பிரிவாக நடந்த அமர்வில் காலை ஆளுமைசார்ந்த விபரணப் படங்களான 'சுப்பிரமணிய பாரதி', 'அசோகமித்திரன்' ஆகிய விவரணப்படங்களும் பிற்பகல் அமர்வில் நாடகக் கலை பற்றிய இரு விவரணப் படங்களும் காண்பிக்கப்பட்டது. சுதந்திரத்துக்குப் பின்னான நாடக அரங்கம், பாதல் சர்கார் ஆகிய நாடகக் கலை தொடர்பான விவரணப்படங்கள் காண்பிக்கப்பட்டது.

காலை அமர்விற்கு சினிசங்கப் பிரதிநிதி யமுனா ராஜேந்திரன் தலைமை தாங்கினார். அறிமுக உரையை வழங்கிய அம்சன்குமார் தமிழகத்தில் விவரணப்படங்கள் பற்றிய அறிவு வளர்ந்து வருவதாகக் குறிப்பிட்டார். அவர் மேலும் பேசுகையில் ராஜேந்திரனின் சினிமா பற்றிய ஆய்வுகள் தமிழகத்தில் மிகவும் வரவேற்கப்படுவதாகவும் அவர் உலகத் தமிழர்களுக்குப் பொதுவானவர் என்றும் புகழாரம் சூட்டினார். சினி சங்கம் நடத்திய சர்வதேசக் குறும்பட விழா தமிழகக் குறும்படங்களை தமிழகத்துக்கு வெளியே கொண்டு வந்த முதல் முயற்சி என்றும் அம்சன் குமார் தெரிவித்தார். இக்கலந்துரையாடலில் தமிழகத்தின் சிறுகதை எழுத்தாளர் முருகனும் கலந்து கொண்டார்.

'சுப்பிரமணிய பாரதி', 'அசோகமித்திரன்' ஆகிய இரு விவரணப்படங்களும் அந்த இரு மனிதர்களதும் வரலாற்றை மாறுபட்ட கோணத்தில் எடுத்துக் காட்டியது. இவ்விவரணப்படங்கள் பார்வையாளர்களால் மிகவும் பாரட்டப்பட்டது. குறிப்பாக 'சுப்பிரமணிய பாரதியில் அம்சன்குமார் மேற்கொண்ட ஆய்வுகள் பாரதியின் மறுபக்கத்தை காட்டிய விதம் ஆகியவை மிகவும் வரவேற்கப்பட்டது.

## NOTICE TO ADVERTISERS



Rajasingham Jeyadevan

The person shown in the photograph is a nuisance caller. As UDHAYAN has already published about his fraudualent activities, we understand that he has indulged himself in making anonymous phone calls/leaflets or sometimes in fake names to our advertisers and acting in a way trying to damage the reption of our Newspaper.

Dear Advertisers, So, kindly ignore his approach in any form.

Thank you for bearing the nuisance with us and informing us.

A good Businessmen knew the benefit of Publicity. Inexperienced people's opinion is not the true reflection of the dimension of reach in the Community. As Community is a massive density of people widely scattered at various geographical locations. UDHAYAN is the only hard-copy which has the massive effective reach. Many Advertisers are coming back, realising the fall in Business. Udhayan welcomes you with open arms. Tap the Tamil Community through UDHAYAN. The only effective media.

# நுண்கலை அமைப்புகளில் ஏற்பட்ட புண் ஆறுகிறது

மேற்கு இலண்டன் தமிழ்ப்பாடசாலையுடன் இணைந்து இயங்கும் Oriental Fine Arts Academy Of London நிறுவனத்தில் இருந்து பிரிந்து சென்று உருவாக்கப்பட்ட Oriental Fine Arts Academy Limited, Oriental Fine Arts Examination Board ஆகிய நிறுவனங்களுக்கு இடையே ஏற்பட்ட சிக்கல்கள் சுமுகமாகத் தீர்க்கப்பட்டு உள்ளது. இது அந் நுண்கலை அமைப்புகளில் ஏற்பட்ட புண்ணை சற்று ஆற்றிவருகிறது.

இது தொடர்பாக மேற்கு இலண்டன் தமிழ்ப் பாடசாலை, Oriental Fine Arts Academy Of London ஆகிய ஸ்தாபனங்களின் சட்டத்தரணிகளினால் வழங்கப்பட்ட அறிவித்தலில், 'ஆசிய நுண்கலைப் பரீட்சைகள் தொடர்பாக Oriental Fine Arts Academy Limited, Oriental Fine Arts Examination Board ஆகிய நிறுவனங்கள் பரீட்சார்த்திகளைத் தொடர்பு கொண்டதாக நாம் அறிகின்றோம். மேற்கூறப்பட்ட நிறுவனங்களுக்கும் மேற்கு இலண்டன் தமிழ்ப்பாடசாலையுடன் இணைந்து இயங்கும் Oriental Fine Arts Academy Of London நிறுவனத்துக்கும் எந்தவொரு காலத்திலும் எந்த வகையான தொடர்புகளும் இருந்ததில்லை என்பதை அறியத்தருகிறோம்' எனத் தெரிவித்து உள்ளனர்.

மேற்குறிப்பிட்ட இந்தத் தனியார் நிறுவனங்கள் ஏறத்தாழ ஒரே மாதிரியான பெயர்களை உபயோகிக்கும் காரணத்தால் ஏற்பட்ட குழப்பத்தைத் தவிர்ப்பதற்கு மேற்கு இலண்டன் தமிழ்ப் பாடசாலையும் Oriental Fine Arts Academy of London உம் நடவடிக்கைகளை எடுத்துள்ளனர். நுண்கலைப் பரிட்சைகளில் ஆரோக்கியமான போட்டிகளை வரவேற்பதாகக் குறிப்பிட்டு உள்ள Oriental Fine Arts Academy Of london, பரிட்சைகளில் பங்குபற்றுவோர்கள் எந்த நிறுவனத்துடன் தாம் தொடர்பு வைத்திருக்கின்றார்கள் என்பதைத் தெளிவாகத் தெரிந்திருக்க வேண்டியது அவசியம் எனத் தெரிவித்துள்ளது. Oriental Fine Arts Academy Limited உம் Oriental Fine Arts Examination Board London உம் பரீட்சைகளை நடாத்துவதில் ஏற்பட்ட சிக்கலான குழப்பத்தை ஏற்றுக் கொண்டு தமது பரீட்சை அமைப்புகளின் பெயர்களை மாற்றி உள்ளனர். இதன் படி எதிர்காலத்தில் பரீட்சைகள் Oriental Examination Board London மூலம் நடாத்த முடிவு செய்யப்பட்டு உள்ளது.

Oriental Examination Board London - OEBL உம் Oriental Fine Arts Academy Of London - OFAAL ஆகிய இரு அமைப்புகளும் முற்றிலும் வெவ்வேறானவை என்றும் ஒரு அமைப்பினுடைய பரீட்சைப் பெறுபேறுகளையும், சான்றிதழ்களையும் மற்றைய அமைப்பு ஏற்றுக் கொள்ளாது எனவும் அவ்வறிவித்தலில் தெளிவாகத் தெரிவிக்கப்பட்டு உள்ளது. இத் தகவல் இன்னமும் எழுத்தில் போடப்படவில்லை எனக் குறிப்பிட்ட Oriental Examination Board London - OEBL, இயக்குநர் அம்பிகா தாமோதரம் பேச்சளவில் இத்தகவல் ஏற்றுக் கொள்ளப்பட்டது என்பதை

(தொடர்ச்சி 15ம் பக்கம் கீழே)

Graphical Impact



Signs ~ Designs ~ Graphics
61 Hoe Street, Walthamstow, London E17 4SA
Tel 020 8925 2333 Fax 020 8925 2332
www.graphicalimpact.com

NKN HALAL MEAT
(தமிழர் இறைச்சிக் கடை)
NEWLY OPEN
வெம்பிளியில் புதிதாக திறந்துள்ள NKN Halal Meat கடையில் உங்கள் தேவைக்கேட்ப தரமான இறைச்சி மலிந்த விலையில் வாங்கிடலாம். உங்கள் பார்ட்டி வைபவங்களுக்கு மொத்தமாகவும் சில்லரையாகவும் கிடைக்கும். அதிகமாக வாங்குபவர்களும் 3 மயில்களுக்குள்இலவச டெலிவரி உண்டு.
TEL: 020 8795 3886
297, HARROW ROAD, WEMBLEY
தரமான இலங்கை மரக்கறி வகைகள், மளிகை சாமான்கள் எதிரில் உள்ள எமது JEEN CASH & CARRYல் கிடைக்கும்
TEL: 020 8903 4229

## வாசகர் கடிதம்

**சூரியனைக் கை கொண்டு மூட முயலும் மூடர்**

ஹெலன், இல்போர்ட்

இலண்டனில் வெளிவரும் தமிழ்ப் பத்திரிகைகளுடன் பரிச்சயமான பலரைப் போலவே கடந்த சில மாதங்களாக பெரும் சர்ச்சையாகி வரும் தனிநபர்களுக்கு இடையிலான தாக்குதல்களை நானும் கவனிக்கத் தவறவில்லை. பொது நலன் நோக்கில் வரும் செய்திகளை, பொது ஸ்தாபனங்களைக் குத்தகைக்குப் பொறுப்பெடுத்த தனிநபர்கள்; தமக்கு எதிரான தனிப்பட்ட தாக்குதல்களாக கருதியதன் விளைவுகளே இவையென்பது எனது கருத்து. இவை இப்போது இன்னும் ஒருபடி மேலே போய் பொது நலன் கருதும் செய்திகள் எவையும் பிரசுரமாகவோ ஒளிபரப்பாகவோ தடைசெய்ய முனையும் முயற்சியொன்று கடந்த மாத விடுதலையில் வெளியாகியுள்ளது மிகவும் அதிர்ச்சியைத் தருகிறது. இவ்வபாய அறிவிப்பு பொது நலன் விரும்பும் சகலராலும் உரத்துக் கண்டிக்கப்பட வேண்டியதுடன் உடனடியாகத் தடுத்து நிறுத்தப்பட வேண்டியதும் ஒன்றாகுமென நான் நினைக்கிறேன்.

அண்மையில் வெளிவந்த விடுதலை பத்திரிகையில் தீபம் தொலைக்காட்சியில் பல மாதங்களுக்கு முன்னர் ஒளிபரப்பாகி பலர் மறந்து போயிருந்த நிகழ்ச்சியொன்றினைத் தொடர்புபடுத்தி அன்பான வேண்டுகோள் என்ற கோரிக்கையுடன் பெயர் குறிப்பிடப்படாத ஒருவரினால் விடுவிக்கப்பட்டுள்ள இந்த அறிவிப்பை என்னைப் போலவே பலரும் பார்க்கத் தவறியிருக்கமாட்டார்கள். உதயன் பத்திரிகைக்கும் அதன் நிருபர் ஜெயபாலன் அவர்களுக்கு எதிராகவும் தீபம் நிகழ்ச்சித் தயாரிப்பாளர் அனஸ் அவர்களுக்கு எதிராகப் பெயர் குறிப்பிட்டு படத்துடனும் வெளிவந்துள்ள இந்தச் செய்தி குறிப்பாக இடைக்கிடையேனும் பொதுநலன் சார்பான விடயங்களை ஒளிபரப்புச் செய்ய முயன்ற ஒரேயொரு தமிழ்த் தொலைக்காட்சியான தீபம் தொலைக்காட்சிக்கு விடுக்கப்பட்டுள்ள ஒரு எச்சரிக்கையாகவே எண்ண இடமுண்டு. தமிழ் ஊடகங்களில் ஊடுருவலா என்ற தலைப்பில் வெளியாகியுள்ள இது தீபத்திலும் உதயனிலும் இனவாதிகள் ஊடுருவியுள்ளனரா என்ற மிகவும் மலினமான குற்றச்சாட்டொன்றை மறைமுகமாக முன்வைத்து தமிழ் பொது ஸ்தாபனங்களின் நிறைகள், குறைகள், ஊழல்கள் மற்றும் ஒழுங்கீனங்கள் பற்றிய செய்திகள் வெளிவருவதைத் தடுக்க முயன்றுள்ளது. இந்த முயற்சிகள் பொது நலனில் அக்கறை கொண்ட சகலராலும் தடுத்து நிறுத்தப்பட வேண்டியது அவசியமானதாகும்.

இலவச தமிழ் புதினப் பத்திரிகைகள் பல நீண்ட வருடங்களாக இலண்டனில் வெளிவந்து வருகின்றன. பல விளம்பரதாரர்களின் அனுசரணையில் வரும் இவை பெரும்பாலும் அகதிகளாகியுள்ள தமிழ் மக்களை குஷிப்படுத்தும் செய்திகளையே தாங்கி வருவது கண்கூடு. இப்பத்திரிகைகள் பலவற்றின் உள்ளடக்கம் பலவேளைகளில் திரிபுபட்ட பச்சைப் பொய்களாகவும் இலண்டனில் உள்ள சில பிரமுகர்களிற்குப் பரஸ்பரம் முதுகு சொறியும் அவர் அவர்களது பங்களிப்புகளாகவுமே உள்ளன. இந்தச் சூழ்நிலையில் உதயனின் உள்ளடக்கம் மட்டும் மாறுபட்டதாக இருந்து வந்துள்ளது. இலண்டனில் வெளிவரும் சகல பத்திரிகைகளிலும் ஒரு சரியான தமிழ் TABLOID பத்திரிகையாக உருவத்தில் மட்டுமன்றி உள்ளடக்கத்தில் கூட உதயன் மட்டுமே உள்ளது. இலண்டன் தமிழ் ஊடக வாசகர்கள் அனைவருக்கும் உண்மையில் இது ஒரு புது அனுபவம். இலண்டன் தமிழ் பத்திரிகைகளின் வரலாற்றில் இது ஒரு பாய்ச்சல் என்பது எனது கணிப்பு. இலங்கையில் நடந்து வரும் யுத்த சூழலைக் காட்டி இலண்டன் தமிழ் அகதிகளின் கண்களைக் கட்டி குருடராக்கி இனவாதத்தையும் மொழி வெறியையும் பேண முயலும் முயற்சிகளை உடைத்தெறிய முனையும் உதயன் செய்திகளின் பங்களிப்பு உற்சாகப்படுத்தப்பட வேண்டியதொன்று. இதற்குப் பங்களித்த பலரும் பாராட்டப்பட வேண்டியவர்கள். கடந்த பெப்ரவரி உதயன் இதழின் தலைப்புச் செய்தியை இதற்கு ஒரு உதாரணமாக கொள்ளலாம் என நான் கூறுவேன்.

தீபம் தொலைக்காட்சியிலும் கடல் கடந்து வாழும் தமிழ் மக்கள் கரிசனையான விடயங்கள் இடையிடையேயாவது வெளிவருவது உற்சாகப்படுத்தப்பட வேண்டியதொன்று. விடுதலையில் வெளியாகியுள்ள கட்டுரை தீபத்தையும் வாயடைக்க முனையும் முயற்சியின் ஒரு முதற்படி என்பது வெளிப்படை. ஒரு ஊடகத்தின் ஜனநாயக உரிமையைப் பறித்தெடுக்க முனையும் அடாவடித்தனம் இது.

பொது ஸ்தாபனங்கள் பற்றிய செய்திகள் தவறாயிருந்தால் அந்தப் பொது ஸ்தாபனங்கள் அதற்குப் பதில் கூற உதயனும் தீபமும் களம் அமைத்துக் கொடுத்திருக்கின்றன. இந்தச் சூழ்நிலையில் ஊடகங்களில் இனவாதிகள் ஊடுருவலா போன்ற செய்திகளும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான கருத்துக்களைக் கொண்டோர் இவ்வூடகங்களில் ஊடுருவி உள்ளனரா போன்ற கேள்விகளும் மிகவும் மட்டமானவை. இது பொது நலன் கருதும் ஊடகங்களை வாயடைக்க முனையும் ஒரு கீழ்த்தரமான முயற்சி.

பொது ஸ்தாபனங்கள் அனைத்தும் பொது மக்களுக்கு கணக்குக் கூற கடமைப்பட்டவர்கள் என்பது பொது விதி. தமிழர் பெயரில் இயங்கும் ஸ்தாபனங்கள் தமக்கும் கணக்குக் கூற கடமைப்பாடு உடையவர்கள் என தமிழர்கள் எதிர்பார்ப்பதில் தவறில்லை. இப்பொது ஸ்தாபனங்களின் நடைமுறைகள் கேள்விக்குரியதாக இருந்தால் அவற்றைச் சுட்டிக்காட்ட வேண்டிய தார்மீகக் கடமை தமிழ் ஊடகங்களுக்கு உண்டு. இப்பொது ஸ்தாபனங்களில் பங்குபற்றுபவர்கள் இப்பொறுப்புக்களை உணராது தான்தோன்றித் தனமாக நடந்தால் அவர்களைத் தட்டிக் கேட்க தமிழ் மக்கள் உரித்துடையவர்கள். எந்த அரசியலின் பெயராலும் இவ் உரிமைகளைத் தட்டிப்பறிக்க எவருக்கும் உரிமையில்லை. விடுதலை செய்தி மூலம் வெளியாகியுள்ள முயற்சி அராஜகமானதுடன் ஜனநாயக விரோதமானதுமாகும். பொது ஸ்தாபனங்களின் குறை நிறைகளைப்பற்றிக் கூறுபவர்கள் விடுதலைப் புலிகளின் அரசியலுக்கு எதிரானவர்கள் என்ற விடுதலையின் கருத்து மிகவும் அற்பத்தனமானது. பொதுநலன் கருதும் செய்திகள் உதயன் பத்திரிகையிலும் தீபம் தொலைக்காட்சியிலும் வெளிவருவதைத் தடுக்க முயலும் இந்த முயற்சி கண்டிக்கப்பட வேண்டியது.

சூரியனைக் கை கொண்டு மூட முடியாதென்பது இந்த முயற்சியின் நாயகர்களுக்குப் புகட்டப்படல் வேண்டும்.

(உதயனுக்கு அனுப்பி வைக்கப்பட்ட மடல் இங்கு திருத்தங்கள் எதுவுமின்றிப் பிரசுரிக்கப்படுகிறது.)

# ஐரோப்பியத் தமிழர்களின் ஐ நா நோக்கிய அமைதிப் பேரணி

ஐ நாவை நோக்கிய அமைதிப் பேரணி 07.04.2003 திங்கள் 2 மணி அளவில் ஜெனீவாவில் நடைபெற்றது. பிரான்ஸ், ஜேர்மனி, பிரித்தானியா, இத்தாலி, டென்மார்க், சுவீடன், நோர்வே, நெதர்லாந்து ஆகிய நாடுகளில் இருந்து தமிழ் மக்கள் இந்த பேரணியில் கலந்து கொண்டிருந்தார்கள். ஒரு தசாப்தத்திற்கு மேலாக இந்த எழுச்சிப் பேரணி நடை பெற்று வருகிறது. தமிழர்களுடைய இந்த அமைதிப் பேரணி வருடாவருடம் ஐ. நா வளாக முன்றலை நோக்கி வரும் என்பது ஐ. நாவின் நிகழச்சி நிரலில் கூட இடம் பெற்றுவிட்டிருக்கிறது.

1984 களின் காலப் பகுதிகளிலேயே புலம் பெயர்ந்த தமிழர்கள் ஐ. நா வளாக முன்றலில் - இலங்கைத் தீவில் தமிழர் மீதான மனித உரிமைகள் மீறப்பட்டு வருகின்ற செய்தியை தமது ஆர்ப்பாட்ட ஒன்று கூடல் நிகழ்வுகள் மூலம் வெளிப்படுத்தி வந்திருக்கிறார்கள்.

தமது தாயகத்தை அங்கீகரிக்கக் கோரி, தமது சுயநிர்ணயத்தை அங்கீகரிக்கக் கோரி இந்த மக்கள் 14 வது தடவையாக ஐ. நா முன்றலை நோக்கி புறப்பட்ட எழுச்சி நிகழ்வு இது. இந்தப் பேரணி சமாதான காலத்தில் நிகழ்ந்த இரண்டாவது பேரணி. இந்தப் பேரணியில் முன்னரைப் போல மக்கள் பேரணியாக கலந்து கொண்டிருக்கவில்லை என்பதற்கு சமாதான காலம், மக்கள் நாட்டிற்க்குச் சென்று வருவது, காலநிலை, வேலை நாள், என்பன போன்ற பல காரணங்கள் முன்வைக்கப்படுகின்றன. இருந்தும் இந்நிகழ்ச்சியில் நாலாயிரத்திற்கும் அதிகமான மக்கள் கலந்து கொண்டிருந்தார்கள்.

## ஐந்து அம்சக் கோரிக்கை

அமைதிப் பேரணியில் திருமதி அடேல் பாலசிங்கத்தின் "சுதந்திர வேட்கை" என்றும் நூல் வெளியிட்டு வைக்கப்பட்டது. "கடல் காற்று" திரைப்படத்தின் விடியோப் பிரதியும் வெளியீட்டு வைக்கப்பட்டது. விடுதலைப் பாடல்கள் அடங்கிய இசைத்தட்டுக்கள் வெளியிட்டு வைக்கப்பட்டன. இறுதியில் திரு அன்ரன் பொன்ராசா 5 அம்சங்கள் அடங்கிய பிரகடனங்களை ஒலிக்க, பேரணியில் கலந்து கொண்ட மக்கள் ஒரே குரலில் ஓங்கி ஒலித்தனர்.

தமிழீழ மக்களின் தேசியம் - தாயகம் - சுயநிர்ணயம் அங்கீகரிக்கப்பட வேண்டும்

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் மீதான தடை அகற்ற வேண்டும்.

உயர் பாதுகாப்பு வலயத்தில் இருந்து சிறீலங்கா இராணுவம் உடன் வெளியேற வேண்டும்.

தமிழீழக் கடற்பரப்பில் மீன்பிடித் தடை முற்றாக நீக்கப்பட வேண்டும்.

நிரந்தரத் தீர்வு காணும் வரை அகதிகளைத் திரும்பி அனுப்புவது முற்றாக நிறுத்தப்பட வேண்டும்.

# பாரிஸ் தமிழர்கள் இலங்கைக்குத் திரும்புகிறார்கள் விமான இருக்கைகள் நிரம்புகின்றது

\- பாலன் குட்டி, பரிஸ்

பிரான்ஸ் நாட்டிற்கு புலம்பெயர்ந்த இலங்கைத் தமிழ் மக்களில் பலர் தங்களுக்கு வழங்கப்பட்டிருந்த அகதி அந்தஸ்தை தற்போது நிராகரிக்கும் படி கோரி வருகின்றனர். அகதிகளுக்கான நிறுவனம் இவர்களுடைய இந்தக் கோரிக்கையை ஏற்றுக் கொண்டதும் அவர்கள் இமிக்கிறன்ட் விசா பெற்றுக் கொண்டு இலங்கையை நோக்கி படை எடுக்கத் தொடங்குகிறார்கள். இதனால் இந்த ஆண்டின் கோடை விடுமுறைக்கான காலத்தில் இலங்கைக்கு செல்லும் விமானங்களின் இருக்கைகள் தற்போதே நிரம்பி விட்டதாக பயண முகவர்கள் தெரிவிக்கின்றனர். ஆனால் இலங்கையில் பேச்சுவார்தகை தொடங்கி உள்ளதே தவிர இன்னும் அமைதி திரும்பி வரவேயில்லை என்கிறார் ஐ நா நோக்கிய அமைதிப் பேரணியில் கலந்து கொண்ட பாரிஸ் இளைஞர் சிவராமன்.

இந்த நிலையில் பிரான்சின் அகதிகள் விவகாரத்தை கவனித்து வரும் OFRA வில் அகதி அந்தஸ்துக் கோரியிருந்த பலர் தமது அகதி அந்தஸ்தை நிராகரித்து விட்டு இமிக்கிறண்ட விசா பெற்றுக் கொண்டு நாட்டுக்குப் போய் வருகிறார்கள். இவ்வாறு அகதி நிலையை நிராகரித்து விட்டு செல்வதை அந் நிறுவனங்கள் விழிகளை அகலத் திறந்து பார்க்கத் தொடங்கியுள்ளன.

நிரந்தர சமாதானம் ஏற்படாத வரை புலம் பெயர்ந்து அகதிகளாக தஞ்சம் கோரி இருக்கும் மக்களை திருப்பி அனுப்ப வேண்டாமென பல்வேறு மட்டங்களில் கோரிக்கைகள் விடுக்கப்பட்டு வருகின்றன. பல மனித உரிமை அமைப்புக்களும், பல பொது அமைப்புக்களும் சமூக ஆர்வலர்களும் இக் கோரிக்கையை முன் வைக்கின்றனர். நாட்டுக்குள் இடம்பெயர்ந்தவர்களே தமது வாழ்விடங்களுக்கு திரும்பிச் செல்ல முடியாத நிலையே அங்கு காணப்படுகின்ற,து.

யேர்மனியிலும் இவ்வாறாக அகதி நிலையை நிராகரித்து விட்டு இமிக்கிறண்ட் விசா பெற்றுக்கொண்டு பயணப் பட்டு வரும் மக்களை அவதானித்தவர்கள் இவர்களுக்கு அங்கு ஒரு பிரச்சினையும் கிடையாது எனக் கூறி ஏற்கனவே அகதி அந்தஸ்துக்காக விண்ணபித்திருந்த பலரது விண்ணப்பங்களை நிராகரித்து அவர்களை நாட்டுக்கு திருப்பி அனுப்பினர். புதிதாக அகதி அந்தஸ்துக் கோரி வருபவர்களுக்கும் அனுமதி மறுக்கப்பட்டது. மேலும் நாட்டுக்குப் போய் வருபவர்கள் அங்கு ஆடம்பரமாகவும் விளம்பரத் தனமாகவும் நடந்து கொள்ளும் முறைகள் பற்றி சமூக ஆய்வாளர்கள் கவலைத் தெரிவிக்கின்றனர். கடன் பட்டுக்கொண்டும் பல்வேறு வழிகளால் கஸ்டப்பட்டுக் கொண்டும் உண்மைக்குப் புறம்பான போலி வாழ்க்கையை அரங்கேற்றி விட்டு வருவதாகவும் கூறுகிறார்கள்.

அமைதிக்கும் சமாதானத்துக்காக உழைக்கும் கடமைகளிலிருந்து வழுவி இப்படி பொறுப்பற்ற விதமாக நடந்து கொள்ளுவது பல நெருக்கடிகளையும், பல சிக்கல்களையும் எதிர் காலத்தில் புலம்பெயர்ந்த சமூகத்திற்கு தோற்றுவிக்கும் என சில சமூக அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

## புண் ஆறுகிறது...

(தொடர்ச்சி)

உறுதிப்படுத்தினார். அவர் மேலும் குறிப்பிடுகையில் தங்கள் பரீட்சைகள் இலண்டனில் வெற்றிகரமாக நடைபெற்றதாகவும் ஏனைய ஐரோப்பிய நாடுகளில் அது நடைபெற இருப்பதாகவும் தெரிவித்தார்.

எதிர்காலத்தில் Oriental Fine Arts Academy Of London - OFAAL ன் நுண்கலைப் பரீட்சைகள் ஏப்ரல் 5இலும் மே 10 இலும் கிறீன்போர்டில் உள்ள Stanhope Primary School இலும் Oriental Examination Board London - OEBL ன் நுண்கலைப் பரீட்சைகள் மார்ச் 29, ஏப்ரல் 12 ஆகிய தினங்களில் ஹரோவில் உள்ள Harrow High School இலும் நடைபெற இருப்பதாகவும் அவ்வறிவித்தல் தெரிவக்கிறது.

பரீட்சார்த்திகள் தாங்கள் எந்த அமைப்பில் பரீட்சைக்கு தோற்றுகிறார்கள் என்பதை தெளிவாக விளங்கிக் கொள்ள வேண்டும் இல்லாவிட்டால் குழப்பம் தொடரும்.

For News & Advertising: 020 8952 5677 For Distributions : 020 8905 7775

☆ ☆ To Know your Birth Star contact 020 8905 7775 ☆ ☆

## MAAZA LIMITED

maaza

The Tropical Fruit Drink




**Trade Enquiries Welcome**

Contact Maaza Ltd. on

**020 8904 9989**

Fax: 020 8904 5068

www.tastybite.com

DRINKS AVAILABLE RETAIL
FROM NEAREST GROCERIES SHOP

Traders please contact
Unit G3 Wembley Commercial Centre, East Lane, Wembley, Middx. HA9 7UR

## TRAVLIN STYLE

Low Cost flights / Hotel / Insurance to all Destinations

| | | | | | |
|---|---|---|---|---|---|
| INDIA | £349 | CANADA | £245 | COLOMBO | £365 |
| DUBAI | £250 | NAIROBI | £325 | SOUTH AFRICA | £335 |
| | | ORLANDO | £200 | | |
| NEWYORK | £145 | LISBON | £120 | PARIS | £49 |

All Prices are subject to availability and Airport Taxes. Special Discount to Senior Citizens and Groups to India.

Travelin Style Ltd. 46 Church Road, Stanmore, Middx.HA4 4AH **Tel: 020 8954 0077** Retail agents for Atol holders

## NESAN Cash & Carry

NEWLY OPENED MANY OPENING OFFERS

* இலங்கை மரக்கறி வகைகள், நிரு, யாழினி, லீலா, TRS தயாரிப்புகள், சமுத்திரா, யாழினி கடல் உணவுகள் யாவும் குறைந்த விலையிலும்
* திருமண ஆடை அலங்காரங்கள் வாடகைக்கும்
* மேலும் பிரதி வாரமும் அதிரடி விலைக்கழிவில் பொருட்களும் உண்டு

**SPECIAL OFFERS EACH WEEK**

* ஓடியோ கேஸட், C.Dக்கள் விற்பனைக்கும் உண்டு

வாருங்கள் Over 30 pounds spent 5 pounds TeleVoice Phonecard FREE

**Tel: 020 8574 4018**

**217 The Broadway Southall**



The UDHAYAN
உதயன்
ADVERTISE
FOR
BEST
RESULTS
020 8952 5677

## NET TRY தமிழ் சூப்பர்மார்க்கெட்

27 Watling Avenue, Edgware, Middx. HA8 0JD

புதிய நிர்வாகத்தின் கீழ் **020 8952 5959**

இலங்கையிலிருந்து பெறப்படும் உடனடி மரக்கறி வகைகள், லீலா, நிரு, Fudco உடன் சமுத்திரா கடலுணவுப் பொருட்கள், மதுபான வகைகள், கோயிலுக்கு உரிய பொருட்கள், இதர பல சரக்குப் பொருட்கள், தாயகப் பொருட்கள் யாவும் இங்கு கிடைக்கும்.

தமிழ், ஹிந்தி புதிய பழைய சினிமா வீடியோ கஸட்டுகள், வீ.சீ.டி.கள், டி.வீ.டி.கள் வாடகைக்கும், ஓடியோ கஸட்டுகள், சீ.டி.க்கள் விற்பனைக்கும் இங்கு இருக்கின்றன.

## HARTEX

BODY WARMERS • HIKING BOOTS

TENTS • SLEEPING BAGS • AIR BEDS • MAP CASES

RAINWEAR • CUTLERY SETS AND PLATES • WATER BOTTLES

Established 1969

**THE GREAT OUTDOORS**

PULLOVERS
COOKWARE
TENTS
RUCKSACKS
HAMMOCKS
HEADWEAR
MAPS
GAITERS
SHORTS
SOCKS
THERMAL UNDERWEAR
GROUND SHEETS




COMBAT CLOTHING
RAINWEAR
BOOTS
GLOVES
BELTS
WATER BOTTLES
BODY WARMERS
WEBBING
HIKING SOCKS
FOAM MATS
AIR BEDS

COMPRESSOR BAGS • MONEY BELTS

| | |
|---|---|
| 55 Victoria Road | 321 Northolt Road |
| Ruislip Manor | South Harrow |
| Middlesex HA4 9BS | Middlesex HA2 8JA |
| TEL: 01895 634244 | TEL: 020 8864 3333 |

OPEN 7 DAYS



## MULTILINES LIMITED

Designer Bedrooms / Kitchens & Shopfitters

- DESIGNER BEDROOMS
- KITCHENS
- LOUNGE UNITS
- HOME-STUDY
- TRADITIONAL INDIAN SEATING
- MANDIRS
- BEDS



DELIVERY OF PRODUCTS ONLY WITHIN M25

Unit 1, 255 Water Road, Abbeydale Industrial Estate, Wembley, Middx. HA0 1JW

Tel: 020 8997 7788 Fax: 020 8997 9988

E mail: info@multilines.co.uk, Web: www.multilines.co.uk